ஒளிவீசின. அப்போது எலியாவும் மோசேயும் அவர்களுக்குத் தோன்றினர். இருவரும் இயேசுவோடு உரையாடிக் கொண்டிருந்தார்கள். பேதுரு இயேசுவைப் பார்த்து, “ரபி, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைப்போம்” என்றார். தாம் சொல்வது என்னவென்று அவருக்குத் தெரியவில்லை. ஏனெனில் அவர்கள் மிகுந்த அச்சம் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு மேகம் வந்து அவர்கள்மேல் நிழலிட அந்த மேகத்தினின்று, “என் அன்பார்ந்த மைந்தர் இவரே இவருக்குச் செவிசாயுங்கள்” என்று ஒரு குரல் ஒலித்தது. உடனடியாக அவர்கள் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். தங்கள் அருகில் இயேசு ஒருவரைத் தவிர வேறு எவரையும் காணவில்லை. அவர்கள் மலை-லயிலிருந்து இறங்கி வந்துகொண்டிருந்த போது அவர், “மானிட மகன் இறந்து உயிர்த்தெழும் வரை, நீங்கள் கண்டதை எவருக்கும் எடுத்துரைக்கக் கூடாது” என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்கள் இவ்வார்த்தையை அப்படியே மனத்தில் இருத்தி, “இறந்து உயிர்த்தெழுதல்” என்றால் என்னவென்று ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள்.

**தியானம்:** இறைவனின் சாயலாக படைக்கப்பட்ட அனைத்து மக்களும் விண்ணரசில் நுழைய வேண்டும் என்பதே இறைவனின் சித்தம். அதற்காகவே நாம் அனைவரும் இவ்வுலகில் பயணித்துக்கொண்டிருக்கிறோம். இப்பயணத்தில் வெற்றி பெற நாம் எடுக்கும் முயற்சிகள் நம்மை படிப்படியாக கடவுளின் சாயலாக மாற்றுகின்றன. இது ஒரு விசுவாசப் பயணம். ஆபிரகாமைப்போல் இறைவன் அளித்த வாகுறுதிகள் யாவும் நிறைவேறும் என்ற உறுதிப்பாடினை அடிப்படையாக கொண்டதாக நமது தீர்மானங்கள் இருக்க வேண்டும். வாகுறுதிகள் நிறைவேறும் என்று நம்புவது மட்டும் விசுவாசம் ஆகாது. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் எமது தீர்மானங்களும் செயல்பாடுகளும் அமைய வேண்டும் என்பதே இன்று எமக்கு விடப்படும் அழைப்பாகும். யேசுவின் உருமாற்ற நிகழ்வைக் கூறும் இன்றைய நற்செய்தி வாசகமும் எமது விசுவாசப் பயணத்திற்கான முக்கியமான செய்தியாக அமைந்துள்ளது. இது யேசுவில் இறைவன் வெளிப்படுத்தவுள்ள மாட்சியின் முன் அடையாளம். யேசுவின் உரு-மாற்றத்தைக் கண்டு அதன் மகிமைக்குள் தங்கிட பேதுரு முற்படுகின்றார். நாமும் எங்கு சௌகரியமும், சுகமும், பாதுகாப்பும் உள்ளதோ அங்கே தங்கிவிட நினைக்கின்றோம். ஆனால் இறைவன் ஆபிரகாமை அழைத்தது போல் எம்மையும், எமது சவால்களை, துன்பங்களை, சோதனைகளை கடந்து செல்ல அழைக்கின்றார். ஏனெனில் துன்பங்கள் சோதனைகள் வழியாகத்தான் இறைவன் தமது மாட்சிமைக்கு எம்மை தயார்படுத்துகிறார். சிலுவைகள்தான் உயிர்ப்பின் தொடக்கம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சிலுவைகளின் வடிவங்கள் வேறுபடலாம், ஆனால் நாம் அவை-களை அரவணைத்து கடவுளின் அன்பார்ந்த மகன் யேசுவின் வழி செல்வதே உண்மைக் கிறீஸ்த்தவனின் முதிர்ச்சியடைந்த விசுவாச வாழ்வாகும்!



துணையாளன் - தூய ஆவியே

தீ 21 பெப்புவரி - 2021 நாக்கு 9

# “உலகெங்கும் சென்று படைப்புக்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்”

புதிய ஆண்டின் முதல் மாதத்தைக் கடந்து இரண்டாம் மாதமான மாசிப்பனி மூசிப்பெய்யும் மாதத்திற்குள் கால் பதிக்கின்றோம். இம் மாத்தின் முதல் வாரத்தில் 2ம் நாள் ஆண்டவர் இயேசுவை காணிக்கையாக ஒப்புக்கொடுத்த திருநாளையும், இரண்டாம் வாரத்தில் 11ம் திகதி லூர்து அன்னையின் திருநாளை கொண்டாடி, மூன்றாம் வாரத்தில் திருநீற்றுப் புதனுடன் தவக்காலத்தில் கால் பதித்து, நான்காம் வாரத்தில் புனித பேதுருவின் தலைமைப்பீட திருநாளையும் நினைவு கூரவுள்ளோம்.

இம்மாதத்தின் தொடக்கநாளின் இறைவார்த்தைகள் இறைபணிக்கென அழைக்கப்பட்டு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் எவ்வளவுதான் அளப்பெரிய பணிகளை செய்தாலும் இறுதியில் அவர்களுக்கு இவ்வுலகில் கிடைப்பது புறக்கணிப்புக்களும், துன்பகரமான வாழ்க்கையுமே என்பதை அறிக்கையிடுகிறது. ஆனாலும் அப்புறக்கணிப்புகளும், துன்பங்களும், அவர்களுக்கு விண்ணக நலன்களை பெற்றுக்கொடுக்கும் அருள் அடையாளங்களாக இறைவனால் மாற்றப்படுகிறது. ஆண்டவர் இயேசு ஆலயத்தில் காணிக்கையாக்கப்பட்ட போதும் சிமியோன் தேவதாயாருக்கு சொன்ன வாக்கும் “உம் இதயத்தை ஒரு வாள் ஊடுருவும்” திருக்குடும்ப வாழ்விலும், தேவ அன்னையின் வாழ்விலும், பல துன்பங்களையும், இதயத்தை ஊடுருவக்குத்தும் அளவிலான வேதனை நிறைந்த நாட்களையும் இறைவன் அனுமதித்தார் என்றால் எங்கள் குடும்பங்களை உலுக்கும் துன்பங்களும் உலகையே அச்சுறுத்திநிற்கும் கொரோனா வைரசின் உயிர் அச்சுறுதல்களும், துன்பங்களும் எம்மாத்திரம்?

நாம் இம்மாதத்தில் புகஇருக்கும் தவக்காலமும், அதன் தொடக்க நாள் செய்தியும், எமக்கு மீண்டும் உணர்த்தி நிற்கும் உண்மைகள், “மனிதனே நீ மண்ணாக இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்” “மனம் திரும்பி நற்செய்தியை நம்புங்கள்”. நாம் அனுபவிக்கும் துன்பங்களையும், துயரங்களையும், பயன்படுத்தி எம்மை நாங்கள் தூய்மையாக்கிக் கொள்ளவும், விண்ணக நலன்களை

நாங்களும் உரிமையாக்கி கொள்ள இறைவனால் வழங்கப்படும் சந்தர்ப்பங்கள் இவை என்பதை ஏற்றுக்கொண்டவர்களாக இத்தவக்காலத்தில் புதியதொரு (Art of living) அதாவது எம்மை நோக்கி வரும் துன்பங்களையும், துயரங்களையும், நல்மனதோடு ஏற்று எமது ஈடேற்றப்பாதையின் ஏணிப்படிகளாக மாற்றி, மண்ணாய் இருக்கும் மனித தன்மைகளை புனித தன்மைகளாக்கி விண்ணக ஏணிப்படிகளில் ஏறிச்செல்வோம். மீன்பிடித்துக்கொண்டிருந்த பேதுருவை முதல் பாப்பானவராகவும், விண்ணக திறவுகோலுக்குரிய நம்பிக்கையாளராகவும் மாற்றிய இறைவன் இம் மாத இறைவார்த்தைகள் ஊடாகவும், தவக்கால சுத்திகரிப்பினாலும், எம் அனைவரையும் புடமிடுவாராக.

**நன்றி**

**அன்புடன்,**

**அருட்தந்தை. அன்றூ தவராஜசிங்கம்**

**Parish Priest**

**Our Lady of Deliverance Tamil Catholic Mission**

**Montreal (QC), Canada.**



# பெப்ரவரி – 28 –தவக்கால 3ம் ஞாயிறு

**“ஐயா இந்த ஆண்டும் இதை விட்டுவையும்”**

---

## முதல் வாசகம்: தொநூ 22:1-2.9.10-13.15-18

தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும், மண்ணுலகையும் படைத்தபொழுது, மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரளின்மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது. அப்பொழுது கடவுள், “விண்ணுலகுக்குக் கீழுள்ள நீர் எல்லாம் ஓரிடத்தில் ஒன்றுசேர உலர்ந்த தரை தோன்றுக!” என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் உலர்ந்த தரைக்கு நிலம் என்றும் ஒன்றுதிரண்ட நீருக்குக் கடல் என்றும் பெயரிட்டார். கடவுள் அது நல்லது என்று கண்டார். அப்பொழுது கடவுள், “புற்பூண்டுகளையும் விதை தரும் செடிகளையும், கனி தரும் பழமரங்களையும் அந்த அந்த இனத்தின்படியே நிலம் விளைவிக்கட்டும்” என்றார். அது அவ்வாறே ஆயிற்று. புற்பூண்டுகளையும் விதையைப் பிறப்பிக்கும் செடிகளையும் கனிதரும் மரங்களையும் அந்த அந்த இனத்தின்படி நிலம் விளைவித்தது. கடவுள் அது நல்லது என்று கண்டார். மாலையும், காலையும் நிறைவுற்று மூன்றாம் நாள் முடிந்தது. அவை மண்ணுலகிற்கு ஒளிதர விண்விரிவினில் ஒளிப்பிழம்புகளாக இருக்கட்டும்” என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் இருபெரும் ஒளிப்பிழம்புகளை உருவாக்கினார். பகலை ஆள்வதற்குப் பெரிய ஒளிப்பிழம்பையும், இரவை ஆள்வதற்குச் சிறிய ஒளிப்பிழம்பையும் மற்றும் விண்மீன்களையும் அவர் உருவாக்கினார். கடவுள் மண்ணுலகிற்கு ஒளிதர விண்ணுலக வானத்தில் அவற்றை அமைத்தார். பகலையும் இரவையும் ஆள்வதற்கும் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரிப்பதற்கும் அவற்றை அமைத்தார். கடவுள் அது நல்லது என்று கண்டார்.

## இரண்டாம் வாசகம்: உரோ 8:31-34

இதற்குமேல் நாம் என்ன சொல்வோம்? கடவுள் நம் சார்பில் இருக்கும்போது, நமக்கு எதிராக இருப்பவர் யார்? தம் சொந்த மகனென்றும் பாராது அவரை நம் அனைவருக்காகவும் ஒப்புவித்த கடவுள், தம் மகனோடு அனைத்தையும் நமக்கு அருளாதிருப்பாரோ? கடவுள் தேர்ந்து கொண்டவர்களுக்கு எதிராய் யார் குற்றம் சாட்ட இயலும்? அவர்கள் குற்றமற்றவர்கள் எனக் காட்டுபவர் கடவுளே. அவர்களுக்கு யார் தண்டனைத் தீர்ப்பு அளிக்க இயலும்? இறந்து, ஏன், உயிருடன் எழுப்பப்பட்டு கடவுளின் வலப் பக்கத்தில் இருக்கும் கிறிஸ்து இயேசு நமக்காகப் பரிந்து பேசுகிறார் அன்றோ!

## நற்செய்தி: மாற் 9:2-10

ஆறு நாள்களுக்குப் பின்பு, இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் அழைத்து, ஓர் உயர்ந்த மலைக்கு அவர்களைமட்டும் தனிமையாகக் கூட்டிக்கொண்டு போனார். அங்கே அவர்கள்முன் அவர் தோற்றம் மாறினார். அவருடைய ஆடைகள் இவ்வுலகில் எந்த சலவைக்காரரும் வெளுக்க முடியாத அளவுக்கு வெள்ளை வெளேரென

உன்னையே உயர்த்துவார் என்றும், அதனால் உன் கடவுளாகிய ஆண்டவரின் தூய மக்களினமாய் நீ இருப்பாய் என்றும் ஆண்டவர் இன்று உனக்கு வாக்களித்துள்ளார்.

## நற்செய்தி: மத் 5:43-48

உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக “பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக எனக் கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள் உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். “இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார். உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? வரி தண்டுவோரும் இவ்வாறு செய்வதில்லையா? நீங்கள் உங்கள் சகோதரர் சகோதரிகளுக்கு மட்டும் வாழ்த்துக் கூறுவீர்களானால் நீங்கள் மற்றவருக்கும் மேலாகச் செய்துவிடுவதென்ன? பிற இனத்தவரும் இவ்வாறு செய்வதில்லையா? ஆதலால், உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்

**தியானம்:** இன்று திருச்சபையானது வியாகுல அன்னையின் தூய கபிரியேல் நாளை நினைவு கூருகின்றது. இவர் கடவுளின் சிறப்பான தூதுவராக செயற்பட்டார். சொல்ல வேண்டியவற்றை சரியாக புரியும்படியாக சொன்னார். அவர் பாதம் எம்மையும் நாம் ஒப்புக் கொடுப்போம். தவக்காலத்தில் பயணம் செய்யும் நாம் பகைவரையும் அன்பு செய்ய வேண்டும் என்ற யேசுவின் கூற்றை இன்றைய நற்செய்தி மூலம் கேட்கின்றோம். இது சாத்தியமானதா? மன்னிக்க முடியாத தன்மைகளும், வரட்டுக் கௌரவமும்தான் இன்று பல நோய்களுக்கு காரணமாக, குறிப்பாக கான்சர் நோய்க்கு காரணமாக அமைந்து விடுவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. ஒருவர் நமக்கு ஏதாவது செய்துவிட்டால் அது எம்மை நித்தம் நித்தம் மனதில் குடைந்து கொண்டே இருக்கும், இது நமக்கு மனரீதியான பாதிப்புகளை ஏற்படுத்திவிடுகின்றது. இன்று பல குடும்பங்களின் சிதைவுக்கும் இவைதான் காரணம். விட்டுக்கொடுக்க முடியாமல், மன்னிக்க முடியாமல் போராட்டமான வாழ்வின் அவலம் சொல்லி முடியாதது. ஆண்டவரை எம் கடவுளாக ஏற்று அவர் சொற்படி நடக்கவேண்டும் என்ற கருத்து இன்றைய முதல் வாசகம் நமக்கு வெளிப்படுத்துகின்றது. “நீ அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிருந்தால், அவர் கூறியபடியே நீ அவருக்குச் சொந்தமான மக்களினமாய் இருப்பாய்” என்று கூறுகின்றது. நம்மால் முடியுமா?



# பெப்ரவரி – 01 – திங்கள்

**தூய கென்றி மோஸ்**

-----------------------------------------------------------

## முதல் வாசகம்: எபி11:32-40

இன்னும் கூறவேண்டுமா? கிதியோன், பாராக்கு, சிம்சோன், இப்தாகு தாவீது, சாமுவேல் ஆகியோர்பற்றியும், இறைவாக்கினர் பற்றியும் எடுத்துரைக்க எனக்கு நேரமில்லை. நம்பிக்கையினாலேயே இவர்கள் அரசுகளை வென்றார்கள் நேர்மையாகச் செயல்பட்டார்கள் கடவுள் வாக்களித்தவற்றைப் பெற்றார்கள் சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள். தீயின் கொடுமையைத் தணித்தார்கள் வாள் முனைக்குத் தப்பினார்கள் வலுவற்றராயிருந்தும் வலிமை பெற்றார்கள் போரில் வீரம் காட்டினார்கள் மாற்றார் படைகளை முறியடித்தார்கள். பெண்கள் இறந்த தம் உறவினரை உயிர்த்தெழுந்தவராய்ப் பெற்றுக்கொண்டார்கள். உயிர்த்தெழுந்து சிறப்புறும் பொருட்டு, சிலர் விடுதலை பெற மறுத்து வதையுண்டு மடிந்தனர். வேறு சிலர் ஏளனங்களுக்கும் கசையடிகளுக்கும் ஆளாயினர் விலங்கிடப்பட்டுச் சிறையில்கூட அடைக்கப்பட்டனர். சிலர் கல்லெறிபட்டனர் இரண்டாக அறுக்கப்பட்டனர் வாளுக்கு இரையாகி மடிந்தனர் செம்மறியின் தோலையும் வெள்ளாட்டுத் தோலையும் போர்த்துக்கொண்டு அலைந்து திரிந்தனர் வறுமையுற்று வாடினர் துன்புறுத்தப்பட்டனர் கொடுமைக்கு உள்ளாயினர்.அவர்களை ஏற்க இவ்வுலகுக்குத் தகுதியில்லாமல் போயிற்று. மலைகளிலும் குகைகளிலும் நிலவெடிப்புகளிலும் பாலை வெளிகளிலும் அவர்கள் அலைந்து திரிந்தார்கள். இவர்கள் அனைவரும் தம் நம்பிக்கையினாலே நற்சான்று பெற்றார்கள். ஆயினும் கடவுள் வாக்களித்ததை அவர்கள் பெறவில்லை. ஏனெனில், நம்மோடு இணைந்துதான் அவர்கள் நிறைவு பெற முடியும் என்பதைக் கடவுள் கருத்தில்கொண்டு நமக்காகச் சிறந்த திட்டம் ஒன்றை வகுத்திருந்தார்.

## நற்செய்தி: மாற்கு 5:1-20

அக்காலத்தில் இயேசுவும் சீடர்களும் கடலுக்கு அக்கரையிலிருந்த கெரசேனர் பகுதிக்கு வந்தார்கள்.இயேசு படகைவிட்டு இறங்கிய உடனே தீய ஆவி பிடித்த ஒருவர் கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிரே வந்தார்.கல்லறைகளே அம்மனிதரின் உறைவிடம். அவரை எவராலும் ஒருபொழுதும் சங்கிலியால்கூடக் கட்டி வைக்க முடியவில்லை.ஏனெனில், அவரைப் பல முறை விலங்குகளாலும் சங்கிலிகளாலும் கட்டியிருந்தும் அவர் சங்கிலிகளை உடைத்து விலங்குகளைத் தகர்த்து எறிந்தார். எவராலும் அவரை அடக்க இயலவில்லை.அவர் இரவு பகலாய் எந்நேரமும் கல்லறைகளிலும் மலைகளிலும் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார் தம்மையே கற்களால் காயப்படுத்தி வந்தார்.அவர் தொலையிலிருந்து இயேசுவைக் கண்டு ஓடிவந்து அவரைப் பணிந்து,”இயேசுவே, உன்னத கடவுளின் மகனே, உமக்கு இங்கு என்ன வேலை? கடவுள் மேல் ஆணை! என்னை வதைக்க வேண்டாம்” என்று உரத்த குரலில் கத்தினார்.ஏனெனில் இயேசு அவரிடம், ”தீய

ஆவியே, இந்த மனிதரை விட்டுப் போ" என்று சொல்லியிருந்தார்.அவர் அம்மனிதரிடம், "உம் பெயர் என்ன?" என்று கேட்க அவர், "என் பெயர் "இலேகியோன், ஏனெனில் நாங்கள் பலர்" என்று சொல்லி,அந்தப் பகுதியிலிருந்து தங்களை அனுப்பிவிட வேண்டாமென்று அவரை வருந்தி வேண்டினார்.அங்கே மலைப்பகுதியில் பன்றிகள் பெருங் கூட்டமாய் மேய்ந்து கொண்டிருந்தன."நாங்கள் அப்பன்றிகளுக்குள் புகும்படி எங்களை அங்கே அனுப்பிவிடும்" என்று தீய ஆவிகள் அவரை வேண்டின.அவரும் அவற்றுக்கு அனுமதி கொடுத்தார். பின் தீய ஆவிகள் வெளியேறிப் பன்றிகளுக்குள் புகுந்தன. ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகள் அடங்கிய அந்தக் கூட்டம் செங்குத்துப் பாறையிலிருந்து கடலில் பாய்ந்து வீழ்ந்து மூழ்கியது.பன்றிகளை மேய்த்துக்கொண்டிருந்தவர்களோ ஓடிப்போய் நகரிலும் நாட்டுப்புறத்திலும் இதை அறிவித்தார்கள். நடந்தது என்னவென்று பார்க்க மக்கள் வந்தனர்.அவர்கள் இயேசுவிடம் வந்தபோது, பேய் பிடித்திருந்தவர், அதாவது இலேகியோன் பிடித்திருந்த அவர், ஆடையணிந்து அறிவுத் தெளிவுடன் அமர்ந்திருப்பதைக் கண்டு அச்சமுற்றார்கள். நடந்ததைப் பார்த்தவர்கள் பேய் பிடித்தவருக்கும் பன்றிகளுக்கும் நேரிட்டதை அவர்களுக்கு எடுத்துரைத்தார்கள். அப்பொழுது அவர்கள் தங்கள் பகுதியை விட்டுப் போய்விடுமாறு இயேசுவை வேண்டிக் கொண்டார்கள். அவர் படகில் ஏறியதும் பேய் பிடித்திருந்தவர் தாமும் அவரோடு கூட இருக்க வேண்டும் என்று அவரை வேண்டிக்கொண்டார். ஆனால் அவர் அதற்கு இசையாமல், அவரைப் பார்த்து, "உமது வீட்டிற்குப் போய் ஆண்டவர் உம்மீது இரக்கங் கொண்டு உமக்குச் செய்ததையெல்லாம் உம் உறவினருக்கு அறிவியும்" என்றார்.அவர் சென்று, இயேசு தமக்குச் செய்ததையெல்லாம் தெக்கப்பொலி நாட்டில் அறிவித்து வந்தார். அனைவரும் வியப்புற்றனர்.

**தியானம்:** இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே, இன்றைய நாளிலே ஆண்டவருடைய வார்த்தை நம்மை நம் வாழ்வை பரிசோதித்து பார்க்க அழைக்கிறது. அழகான நற்செய்தி வாசகம், ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து தீய ஆவி பிடித்த ஒருவனை சுகப்படுத்துகிறார். விவிலிய வார்த்தை எமக்கு சொல்கிறது அந்த மனிதன் கல்லறைகளிலே வாழ்ந்து வந்தான். கல்லறைகள் தான் அவன் உறைவிடம், கல்லறை என்பது நம்மை அடக்கி வைக்கிற ஒரு இடத்தை குறிக்கிறது. மூடப்பட்ட இடம், அடக்கமான இடம் அந்த மனிதன் ஆண்டவரைத் தேடி வந்தான் சுகம் பெற்றான். இன்றைக்கு நம்முடைய வாழ்விலேகூட நாம் பல விதமான கல்லறைகளை சந்தித்துக்கொண்டிருக்கன்றோம், அர்த்தம் நம் வாழ்வை நம் குடும்பத்தை நம்முடைய விசுவாசத்தை அடக்கி ஆளுகிற நிலமைகளை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். ஆண்டவருடைய அன்பைப் பெறமுடியாத அளவுக்கு ஆண்டவருடைய இரக்கத்தை பெறமுடியாத அளவுக்கு, அவருடைய பரிசுத்தமான பராமரிப்பு அனுபவத்தை பெற முடியாத அளவுக்கு நமக்குள்ளாய் வித்தியாசமான கட்டுக்கள் வித்தியாசமான அடக்கு முறைகள் நம்முடைய உள்ளத்திற்குள்ளாய் வாழ்வுக்குள்ளாய் இருந்து நம்மையே கட்டுப்படுத்தி வைத்திருப்பதை



நடுவரிடம் உங்களை ஒப்படைப்பார். நடுவர் காவலரிடம் ஒப்படைக்க, நீங்கள் சிறையில் அடைக்கப்படுவீர்கள்..

**தியானம்:** இன்றைய தியான வாசகங்களானது மனமாற்றம் பற்றியும். ஒருவர் மனமாறாமல் தன்னுடை வாழ்க்கையை தனக்கு ஏற்றால் போல் வாழ்ந்து பாவத்திற்குள் அடிமைப்பட்டு இருப்பேயாரானால் அவரவர் வாழ்ந்ததற்கேற்ப சாவர் என்று கூறுகின்றது. (எசே.19:27) இன்று நாங்கள் இறைவன் ஈக்கு கொடுத்த கட்டளைகளின்படி வாழாது எமது சிந்தனைகள், சொல், செயல்கள் யாவும் நன்மையானதற்கென்று பயன்படுத்தி வாழாமல், அனைத்தும் தீய, அசுத்தமமான ஒவ்வொன்றிற்குமாக பயன்பத்தி வாழ்கின்றோம். ஆனால் எப்படிப்பட்ட பாவ பழக்கவழக்கங்களானாலும் நாங்கள் இறைவனிடம் மன்னிப்பு வேண்டுவோமேயானால் எமக்கு பாவமன்னிப்பு நிற்சயம், மாறாக மீண்டும் பாவவாழ்வு வாழ்தோமேயானால் நாங்கள் செய்ததற்கேற்ப எமக்கு தண்டனை உறுதி. நற்செய்தி வாசகத்திலே நாங்கள் காணிக்கை செலுத்தும் போது சகோர சகோதரிகளுடன் மனஸ்தாங்கள் ஏதாவது இருந்தால் அவர்களுடன் ஒப்புரவாகிவிட்டு பின்பு வந்து காணிக்கைளை செலுத்தும்படி கூறுவதைப் பார்க்கின்றோம். ஆனால் நாங்கள் செலுத்தும் காணிக்கை பெயருக்கும், புகழுக்கும் மட்டுமே உரித்தானதாகும். பணம், காணி, வீடு என்று பல பிரச்சனைகளால் பெற்றோர், சகோதர. உறவானது பிரிந்து காணப்படுகின்றது, ஆனால் அனுதினமும் வழிபாடுகள், செபமாலைகள், காணிக்கைகள் என்று செலுத்துகின்றோம். எனவே நாங்கள் அவ்வாறாக வாழாமல் எமது வாழ்வு சிறந்ததாக இருக்கவும், எமது வழிபாடுகள், செபங்கள், புகழ்ச்சிகள் யாவும் இறைவனக்கு ஏற்புடையதாக இருக்க விசேடமாக இன்றைய காலகட்டத்திலே எவ்வகை பிரச்சனைகளாக இருந்தாலும் இன்று இருப்போர் நாளை இருப்பாரோ என்று தெரியாது. இதை உணர்ந்தவர்களாக அனை-வருடனும் ஒற்றுமையாக வாழ்ந்து இறையாட்சிக்குள் செல்வதற்கு எங்களைத் தயார்படுத்துவோம்.

## பெப்ரவரி – 27 – சனி

**வியாகுல அன்னையின் தூய கபிரியேல்**

---

## முதல் வாசகம்: இச 26:16-19

இந்த முறைமைகளையும் நியமங்களையும் நீ நிறைவேற்றுமாறு உன் கடவுளாகிய ஆண்டவர் இன்று உனக்குக் கட்டளையிட்டுள்ளார். உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் அவற்றை நிறைவேற்றுவதில் கருத்தாயிரு. ஆண்டவரை உன் கடவுளாய் ஏற்பதாகவும் உனக்குக் கடவுளாக இருப்பார் என்றும், அவருடைய வழிகளில் நடப்பதாகவும், அவருடைய நியமங்களையும், கட்டளைகளையும் முறைமைகளையும் கடைப்பிடிப்பதாகவும், அவர் குரலுக்குச் செவி கொடுப்பதாகவும் இன்று நீ அவருக்கு வாக்களித்துள்ளாய். நீ அவருடைய கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில் கருத்தாயிருந்தால், அவர் கூறியபடியே நீ அவருக்குச் சொந்தமான மக்களினமாய் இருப்பாய் என்றும், அவர் உருவாக்கிய எல்லா மக்களினங்களிலும், புகழிலும், பெயரிலும், மாட்சியிலும்

# பெப்ரவரி – 26 – வெள்ளி

### தூய மெக்தில்லு அம்மாள்

---

**முதல் வாசகம்: எசே18:21-28**

தீயவரோ தாம் செய்த பாவங்கள் அனைத்தையும் விட்டு மனம் மாறி, என் நியமங்கள் அனைத்தையும் கைக்கொண்டு, நீதியையும் நேர்மையையும் கடைப்பிடித்தால் அவர்கள் வாழ்வது உறுதி, அவர்கள் சாகார். அவர்கள் இழைத்த தவறுகள் அனைத்தும் அவர்களுக்கெதிராக நினைக்கப்படமாட்டா. அவர்கள் கடைப்பிடித்த நேர்மையின் பொருட்டு அவர்கள் வாழ்வர். உண்மையில், பொல்லாரின் சாவையா நான் விரும்புகிறேன்? அவர்கள் தம் வழிகளினின்று திரும்பி வாழ வேண்டும் என்பதன்றோ என் விருப்பம்? என்கிறார் தலைவராகிய ஆண்டவர். நேரியவர் தம் நேரிய நடத்தையினின்று விலகி, தவறிழைத்து, பொல்லாரைப் போல் வெறுக்கத் தக்கவற்றை எல்லாம் செய்தால், அவர்கள் வாழ்வரோ? அவர்கள் கடைப்பிடித்த நேர்மையானதெதுவும் நினைக்கப்படமாட்டாது. அவர்கள் இழைத்த துரோகத்தின் பொருட்டும், செய்த பாவத்தின் பொருட்டும் அவர்கள் சாவர். ஆயினும், “தலைவரின் வழி செம்மையானதாக இல்லை” என்று நீங்கள் சொல்கிறீர்கள். இஸ்ரயேல் வீட்டாரே! கேளுங்கள். என் வழியா நேர்மையற்றது? உங்கள் வழிகளன்றோ நேர்மையற்றவை! நேரிய-வர் தம் நேரிய நடத்தையினின்று விலகி, தவறிழைத்தால், அவர்கள் தாம் இழைத்த தவற்றின் பொருட்டுச் சாவர். பொல்லார் தாம செய்த பொல்லாப்பினின்று விலகி, நீதியையும் நேர்மையையும் கடைப்பிடித்தால், தம் உயிரை அவர்கள் காத்துக் கொள்வர். அவர்கள் உண்மையைக் கண்டுணர்ந்து, தாம் செய்த குற்றங்கள் அனைத்தினின்றும் விலகி விட்டால், அவர்கள் வாழ்வது உறுதி அவர்கள் சாகமாட்டார

**நற்செய்தி: மத் 5:20-26**

மறைநூல் அறிஞர், பரிசேயர் ஆகியோரின் நெறியைவிட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும். இல்லையெனில், நீங்கள் விண்ணரசுக்குள் புக முடியாது என உங்களுக்குச் சொல்கிறேன். “கொலை செய்யாதே கொலை செய்கிறவர் எவரும் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவர்” என்று முற்காலத்தவர்க்குக் கூறப்பட்டிருப்பதைக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் “தம் சகோதரர் சகோதரிகளிடம் சினங்கொள்கிறவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார் தம் சகோதரரையோ சகோதரியையோ “முட்டாளே” என்பவர் தலைமைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவார் “அறிவிலியே” என்பவர் எரிநரகத்துக்கு ஆளாவார். ஆகையால் நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிபீடத்தில் செலுத்த வரும்பொழுது உங்கள் சகோதரர் சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே பலிப-ீடத்தின்முன் உங்கள் காணிக்கையை வைத்து விட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து உங்கள் காணிக்கையைச் செலுத்துங்கள். உங்கள் எதிரி உங்களை நீதிமன்றத்துக்குக் கூட்டிச் செல்லும் போது வழியிலேயே அவருடன் விரைவாக உடன்பாடு செய்துகொள்ளுங்கள். இல்லையேல் உங்கள் எதிரி



உணருகிறோம். ஆனால் இன்றைய நாளிலே ஆண்டவருடைய வார்த்தை நம்மை அழைக்கிறது ,அந்த கல்லறைகளில் இருந்து அந்த அடக்கு முறைகளில் இருந்து நாம் வெளியேறி இயேசுவை நோக்கி வருகிற போது நம் வாழ்வானது நம்முடைய குடும்பமானது நம்முடைய எதிர்காலமானது, எல்லா நிலமையிலும் ஆசீர்வாதத்தை காணும். இன்றைய நாளிலே நம்முடைய நண்பர்கள், தெரிந்தவர்கள் ,உறவினர்கள், இப்படியாக கட்டப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்காக செபிப்போம். அவர்கள் ஆண்டவரின் அன்பான இரக்கத்தால் புது வாழ்வு பெறுவார்களாக.

# பெப்ரவரி – 02 – செவ்வாய்

### ஆண்டவரை காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல்

---

**முதல் வாசகம்: மலாக்கி 3:1-4**

இதோ! நான் என் தூதனை அனுப்புகிறேன். அவர் எனக்கு முன் வழியை ஆயத்தம் செய்வார் அப்பொழுது, நீங்கள் தேடுகின்ற தலைவர் திடீரெனத் தம் கோவிலுக்கு வருவார். நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் உடன்படிக்கையின் தூதர் இதோ வருகிறார்” என்கிறார் படைகளின் ஆண்டவர்.ஆனால் அவர் வரும் நாளைத் தாங்கக் கூடியவர் யார்? அவர் தோன்றும்போது நிற்க வல்லவர் யார்? அவர் புடமிடுகிறவரின் நெருப்பைப் போலும் சலவைத் தொழிலாளியின் சவர்க்காரத்தைப் போலும் இருப்பார்.அவர் புடமிடுபவர் போலும் வெள்ளியைத் தூய்மைப்படுத்துபவர்போலும் அமர்ந்திருப்பார். லேவியின் புதல்வரைத் தூய்மையாக்கிப் பொன், வெள்ளியைப்போல் அவர்களைப் புடமிடுவார். அவர்களும் ஆண்டவருக்கு ஏற்புடைய காணிக்கை கொண்டு வருவார்கள். அப்பொழுது பண்டைக் காலத்தில் முன்னைய ஆண்டுகளில் இருந்தது போல் யூதாவின் காணிக்கையும் எருசலேமின் காணிக்கையும் ஆண்டவருக்கு உகந்தனவாய் இருக்கும்.

**இரண்டாம் வாசகம்: எபிரேயர் 2: 14-18**

சகோதர சகோதரிகளே, ஊனும் இரத்தமும் கொண்ட அப்பிள்ளைகளைப் போல் அவரும் அதே இயல்பில் பங்கு கொண்டார். இவ்வாறு சாவின்மேல் ஆற்றல் கொண்டிருந்த அலகையைச் சாவின் வழியாகவே அழித்து விட்டார்.வாழ்நாள் முழுவதும் சாவுபற்றிய அச்சத்தினால் அடிமைப்பட்டிருந்தவர்களை விடுவித்தார்.ஏனெனில் அவர் வானதூதருக்குத் துணை நிற்கவில்லை. மாறாக, ஆபிரகாமின் வழிமரபினருக்கே துணை நின்றார் என்பது கண்கூடு.ஆதலின், கடவுள் பணியில் அவர் இரக்கமும், நம்பிக்கையும் உள்ள தலைமைக் குருவாயிருந்து, மக்களுடைய பாவங்களுக்குக் கழுவாயாகுமாறு எல்லாவற்றிலும் தம் சகோதர் சகோதரிகளைப்போல் ஆக வேண்டிய தாயிற்று.இவ்வாறு தாமே சோதனைக்கு உள்ளாகித் துன்பப்பட்டதனால் சோதிக்கப்படுவோருக்கு உதவி செய்ய அவர்வல்லவர்.

**நற்செய்தி: லூக்கா 2: 22-40**

அக்காலத்தில் மோசேயின் சட்டப்படி தூய்மைச் சடங்கை

நிறைவேற்றவேண்டிய நாள் வந்தபோது குழந்தையை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க அவர்கள் எருசலேமுக்குக் கொண்டு சென்றார்கள்.ஏனெனில், ”ஆண் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்கப்படும்” என்று அவருடைய திருச்சட்டத்தில் எழுதியுள்ளது.அச்சட்டத்தில் கூறியுள்ளவாறு ஒருசோடி மாடப்புறாக்கள் அல்லது இரு புறாக்குஞ்சுகளை அவர்கள் பலியாகக் கொடுக்க வேண்டியிருந்தது.அப்போது எருசலேமில் சிமியோன் என்பவர் இருந்தார். அவர் நேர்மையானவர் இறைப்பற்றுக் கொண்டவர் இஸ்ரயேலுக்கு வாக்களிக்கப்பட்ட ஆறுதலை எதிர்பார்த்திருந்தவர் தூய ஆவியை அவர் பெற்றிருந்தார்.”ஆண்டவருடைய மெசியாவைக் காணுமுன் அவர் சாகப்போவதில்லை” என்று தூய ஆவியால் உணர்த்தப்பட்டிருந்தார். அந்த ஆவியின் தூண்டுதலால் அவர் கோவிலுக்கு வந்திருந்தார். திருச்சட்ட வழக்கத்திற்கு ஏற்பச் செய்ய வேண்டியதைக் குழந்தை இயேசுவுக்குச் செய்து முடிக்கப் பெற்றோர் அதனை உள்ளே கொண்டுவந்தபோது.சிமியோன் குழந்தையைக் கையில் ஏந்திக் கடவுளைப் போற்றி,”ஆண்டவரே, உமது சொற்படி உம் அடியான் என்னை இப்போது அமைதியுடன் போகச் செய்கிறீர்.ஏனெனில் மக்கள் அனைவரும் காணுமாறு,நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன.இம்மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி இதுவெ உம் மக்களாகிய இஸ்ரயேலுக்குப் பெருமை” என்றார். குழந்தையைக் குறித்துக் கூறியவை பற்றி அதன் தாயும் தந்தையும் வியப்புற்றனர்.சிமியோன் அவர்களுக்கு ஆசிகூறி, அதன் தாயாகிய மரியாவை நோக்கி, ”இதோ, இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும் எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும்.இவ்வாறு பலருடைய மறைவான எண்ணங்கள் வெளிப்படும். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்” என்றார்.ஆசேர் குலத்தைச் சேர்ந்த பானுவேலின் மகளாகிய அன்னா என்னும் இறைவாக்கினர் ஒருவர் இருந்தார். அவர் வயது முதிர்ந்தவர் மணமாகி ஏழு ஆண்டுகள் கணவரோடு வாழ்ந்தபின் கைம்பெண் ஆனவர்.அவருக்கு வயது எண்பத்து நான்கு. அவர் கோவிலைவிட்டு நீங்காமல் நோன்பிருந்து மன்றாடி அல்லும் பகலும் திருப்பணி செய்துவந்தார். அவரும் அந்நேரத்தில் அங்கு வந்து கடவுளைப் புகழ்ந்து எருசலேமின் மீட்புக்காகக் காத்திருந்த எல்லாரிடமும் அக்குழந்தையைப்பற்றிப் பேசினார்.ஆண்டவருடைய திருச்சட்டப்படி எல்லாவற்றையும் செய்துமுடித்த பின்பு அவர்கள் கலிலேயாவிலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிச் சென்றார்கள்.குழந்தையும் வளர்ந்து வலிமை பெற்று ஞானத்தால் நிறைந்து கடவுளுக்கு உகந்ததாய் இருந்தது.

**தியானம்:** ஆண்டவரின் திருச்சட்டத்தை நிறைவேற்ற பெற்றோர்கள் குழந்தை இயேசுவை கோவிலுக்குக் காணிக்கையாகச் செலுத்தக் கொண்டு சென்ற நாளை நாம் நினைவுகூருகின்றோம். எதுவித கோலாகாலமோ, கொண்டாட்டமோ இன்றி எளிமையாக நடந்து முடிந்த ஒரு நிகழ்ச்சி. அந்நாளை திருஅவை ஒரு திருவிழாவாக கொண்டாட நம்மை அழைத்து நிற்கின்றது. அது எவ்வாறெனில், உண்மையில் ஆண்டவரின் வருகைக்காக் காத்திருந்த சிமியோனுக்கும்,



அனைவரின் மனைவியரும் அவர்களின் கணவருக்கு மரியாதை செலுத்துவர். இவ்வார்த்தை அரசர் மற்றும் தலைவர்களின் பார்வையில் நலமெனத் தோன்றியது. மெமுக்கானின் கருத்திற்கு ஏற்ப மன்னர் செயல்பட்டார். அவர் தம் ஆட்சிக்குட்பட்ட அனைத்து மாநிலங்களுக்கும் அவரவர் மாநில வரிவடிவ வாரியாகவும் ழூஒவ்வொரு மக்களினத்திற்கும் அதனதன் மொழிவாரியகவும் எழுதிய மடல்களில், ஒவ்வொரு ஆண்மகனும் தனது வீட்டில் ஆளுகை செய்யவேண்டும்ழூ என்று கட்டளையிட்டிருந்தார்.

## நற்செய்தி: மத் 7:7-12

கேளுங்கள், உங்களுக்குக் கொடுக்கப்படும் தேடுங்கள், நீங்கள் கண்டடைவீர்கள் தட்டுங்கள், உங்களுக்குத் திறக்கப்படும். ஏனெனில், கேட்போர் எல்லாரும் பெற்றுக் கொள்கின்றனர் தேடுவோர் கண்டடைகின்றனர் தட்டுவோருக்குத் திறக்கப்படும். உங்களுள் எவர-ாவது ஒருவர் அப்பத்தைக் கேட்கும் தம் பிள்ளைக்குக் கல்லைக் கொடுப்பாரா? அல்லது, பிள்ளை மீன் கேட்டால் பாம்பைக் கொடுப்பாரா? தீயோர்களாகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள். அப்படியானால் விண்ணுலகில் உள்ள உங்கள் தந்தை தம்மிடம் கேட்போருக்கு இன்னும் மிகுதியாக நன்மைகள் அளிப்பார் அல்லவா! ஆகையால் பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இறைவாக்குகளும் திருச்சட்டமும் கூறுவது இதுவே.

**தியானம்:** நாம் நமது வாழ்வில் பல இலக்குகளை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறோம். சில இலக்குகளை எம்மால் இலகுவாக அடைய முடிகின்றது, சில இலக்குகள் கடின முயற்சியின் பலனாக கிடைக்கின்றன.சில இலக்குகள் என்னதான் முயன்றாலும் எட்ட முடியாமல் போய்விடுகின்றது. இவை எமது தனிப்பட்ட முயற்சியாலா? அல்லது கடவுளின் துணையும் எம்முடன் இருக்கின்றதா என்று சிந்திக்க இன்றைய நாள் வாசகங்கள் எமக்கு அழைப்பு விடுக்கின்றன.நாம் பல நேரங்களில் இறை பிரசன்னத்தை உணர மறுக்கின்றோம். எம்மீது எமக்கிருக்கும் அதீத நம்பிக்கையும், கடவுள் மீது உள்ள நம்பிக்கை குறைவும் இதற்கு காரணம். ஆனால் கடவுள் எப்போதும் எம்முடன் இருந்து எம்மை வழி நடத்துகிறார் என்பதனை நாம் பல சந்தர்ப்பங்களில் மறந்து விடுகின்றோம். நற்செய்தியில் நாம் கேட்பதை கடவுள் தருவார் என்று பார்க்கின்றோம். ஆனால் நாம் கேட்பது எப்படிப்பட்டது என்பதுதான் இங்கே முக்கியம். கடவுள் எமது தேவை அறிந்து தகுந்த நேரத்தில் நமக்கு தருவார். நாம் இதனை பல நேரங்களில் உணர்ந்திருக்கலாம். கடவுள் நேராக எம்மிடம் வரமாட்டார், மாறாக பல உறவுகள் மூலம் எம்மை சந்திப்பார். நினைத்து பாருங்கள், உங்களின் தேவைகள் பல நீங்கள் உதவி கிடைக்கும் என்று எதிர் பார்க்காத ஒருவரிடம் இருந்து வந்திருக்கும். அப்போது கடவுள் அந்த மனிதர் வழியாக நம்மை சந்தித்தார் என்பது அர்த்தம். எனவே தவக்காலத்தில் நமது உறவுகளுக்கு, நம்முடன் கூட பழகுகின்றவர்களுக்கு, நம்முடன் தொழில் புரிபவர்களுக்கு ஏதாவது தேவை உள்ளது என்று நீங்கள் உனர்ந்தால் , அந்த உதவியை செய்ய உங்களால் முடியும் என்றால் பின் நிற்காதீர்கள். கடவுள் உங்களை ஆசீர் வதிப்பார்.

இயேசு அவர்களுக்கு அழைப்புவிடுக்கின்றார். "பாவம் செய்யும் எவரும் பாவத்திற்கு அடிமை" என்பதனாலே அந்த பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலை அளிக்கவே இயேசு இந்த உலகிற்கு எந்தார். ஆனால் யூதர்கள் இயேசு கொண்டு வந்த விடுதலையை அறியவுமில்லை, அதனை அவர்கள் விரும்பவுமில்லை. ஆனால் கிறிஸ்தவர்களாகிய நாம் இயேசு சொன்ன வார்த்தைகளை அறிந்திருக்கின்றோம் எனவே அவற்றை எமது வாழ்வில் கடைப்பிடித்து வாழ வரம் வேண்டிடுவோம் ஆமென்.

## பெப்ரவரி – 25 – வியாழன்

**தூய தராசீயுள்**

---------------------------------------------------------------

### முதல் வாசகம்: எஸ் 12.14-16.23-25

ஏழாம் நாளன்று திராட்சை மதுவினால் மனம் பூரித்திருந்த மன்னர் அகஸ்வேர் தம் முன்னிலையில் பணியாற்றிய அண்ணகர்களான மெகுமான், பிஸ்தா, அர்போனா, பிக்தா, அபக்தா, சேத்தார், கர்க்கசு ஆகியோருக்கு, பேரழிகியான அரசி வஸ்தியின் எழிலை மக்களும் தலைவர்களும் காணுமாறு அவளை அரச மகுடம் சூட்டப்பட்டவளாகத் தம்முன் அழைத்து வரும்படி கட்டளையிட்டார். ஆனால் அரசி வஸ்தி அண்ணகர்களின் வழியாக வந்த மன்னரின் சொல்லுக்கு இணங்க மறுத்துவிட்டாள். எனவே மன்னர் கடுஞ்சினமுற்றார். பெரும் கோபக்கனல் அவர் மனத்தில் பற்றி எரிந்தது. உடனே அவர் காலங்கள் பற்றிய நுண்ணறிவுடைய ஞானிகளிடம் கலந்துரையாடினார். ஏனெனில் சட்டங்களிலும், நெறிமுறைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களிடம் கலந்துரையாடுவது மன்னரின் வழக்கம். கர்சனா, சேத்தார், அதிமாத்தா, தர்சீசு, மெரேசு, மர்சனா, மெமுக்கான், ஆகிய பாரசீகத்தையும் மேதியாவையும் சார்ந்த ஏழு தலைவர்களும் மன்னருக்கு மிக நெருக்கமானவர்கள் ஆட்சிப் பொறுப்பில் முதன்மை பெற்றோர். அவர்கள் மன்னரின் முகமாற்றத்தைக் கண்டனர். மன்னர் அகஸ்வேர், அண்ணகர்களின் வழியாய் இட்ட கட்டளைப் படி செய்ய மறுத்த அரசி வஸ்திக்குச் சட்டப்படி செய்ய வேண்டியது என்ன? என்று வினவினார். மன்னருக்கும் ஏனைய தலைவர்களுக்கும் முன்பாக மெமுக்கான் கூறியது: "அரசி வஸ்தி மன்னருக்கு எதிராக மட்டுமன்றித் தலைவர் அனைவர்க்கு எதிராகவும், அகஸ்வேரின் ஆட்சிக்குட்பட்ட அனைத்து மாநில மக்களுக்கு எதிராகவும் தவறிழைத்துவிட்டாள். அரசி வஸ்தியின் நடத்தை எல்லாப் பெண்களுக்கும் தெரியவரும். அவர்கள் பார்வையில் அவர்களின் கணவர் இழிவுப்படுத்தப்படுவர். ஏனெனில் மன்னர் அகஸ்வேர் அவளைத் தம்முன் வருமாறு பணித்தும்கூட அவர்முன் அவள் வரவில்லையே! என்பர். இன்றே அரசியின் நடத்தை பற்றிக் கேள்வியுறும் பாரசீக, மேதிய இளவரசிகளும் தம் தலைவர்களிடமும் இதுபோன்றே கூறுவர். ஆதலின் ஏளனத்திற்கும் சினத்திற்கும் முடிவே இராது. எனவே, அரசே, உமக்கு நலமெனப்படின் தாங்கள் ஆணையொன்று பிறப்பிக்க வேண்டும். அவ்வாணை பாரசீக, மேதியச் சட்டங்களில் நிலையாய் இருக்கும்படி எழுதப்படல் வேண்டும். அரசராகிய தங்கள் முன் வஸ்தி இனிவருதல் கூடாது. அவளது அரசுரி-மையை அவளைக் காட்டிலும் சிறந்த ஒருத்திக்குத் தாங்கள் கொடுப்பீராக! அரசரால் பிறக்கப்படும் இந்த ஆணை உமது ஆட்சிக்குட்பட்ட பரந்துகிடக்கும் நாடுகளில் அறிவிக்கப்பட்டவுடன் சிறியோர் பெரியோர்



அன்னாவுக்கும், அவர்கள் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட இயேசுவின் தாய் மரியாளுக்கும், சூசைக்கும் அன்று உண்மையிலேயே உள்ளத்தில் மட்டற்ற மகிழ்ச்சிதான்: உள்ளத்தில் கொண்டாட்டம்தான். உலகத்தின் மீட்பரை தன் உதரத்தில் தாங்கியதால் தான் அனுபவிக்கப்போகும் துன்பங்களை, ஒரு பொருட்டாகக் கருதாமல், அக்குழந்தையால் இந்த மனுக்குலம் அடையப்போகும் மீட்பை எண்ணி மகிழுகின்ற மரியாளின் மனம். இவைகள்தான் இன்று நம்மை திருஅவை கொண்டாட அழைக்கும் கருவூலங்கள். திருவிழா என்றாலே நமக்கு முதலில் நினைவு வருவதெல்லாம் ஆடை, அணிகலன்கள், கொண்டாட்டங்கள்தானே! ஆலய வழிபாடுகள்கூட இவற்றிற்கு விதிவிலக்காக இருந்ததில்லை. கொள்ளை நோயின் நெருக்கடியால் இன்று முடக்கப்பட்டு, ஆலய வழிபாடுகளில் கலந்துகொள்ள முடியாத நிலையில் இன்றைய இறைவார்த்தைகள் நம்மை இன்னும் ஆழமாகச் சிந்தித்துச் செயற்பட அழைக்கின்றன. அன்று கோவிலில் சிமியோன், அன்னா, மரியாள், சூசை இவர்களைத் தவிர மற்றவர்களுக்கு குழந்தை இயேசு வெறும் காட்சிப் பொருளாக மட்டும் இருந்ததுபோல நமக்கும் ஆண்டாண்டாக பல திருவிழாக்கள் கடந்திருக்கலாம். அவை கடந்தவையாகவே இருக்கட்டும். "நீங்கள் தேடுகின்ற தலைவர் திடீரெனத் தம் கோவிலுக்கு வருவார். நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் உடன்படிக்கையின் தூதர் இதோ வருகிறார்." ஆனால், அவர் வரும்நாளைத் தாங்கக் கூடியவர் யார்? அவர் தோன்றும்போது நிற்க வல்லவர் யார்? தயாராகுவோம்.

## பெப்ரவரி – 03 – புதன்

**புனித அன்ஸ்கார்**

---------------------------------------------------------------

### முதல் வாசகம்: எபி 12: 4-7,11-15

பாவத்திற்கு எதிரான போராட்டத்தில், இரத்தம் சிந்தும் அளவுக்கு நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லை. தம் பிள்ளைகளிடம் பேசுவதுபோல் இறைவன் உங்களுக்குத் தந்த பின்வரும் அறிவுரையை நீங்கள் மறந்துவிட்டீர்கள் "பிள்ளாய், ஆண்டவர் உன்னைக் கண்டித்துத் திருத்துவதை வேண்டாம் எனத் தள்ளிவிடாதே. அவர் கண்டிக்கும்போது தளர்ந்து போகாதே." "தந்தை தாம் ஏற்றுக்கொண்ட மக்களைத் தண்டிக்கிறார் ஆண்டவர் தாம் யாரிடம் அன்பு கொண்டிருக்கிறாரோ அவர்களைக் கண்டிக்கிறார்." திருத்தப்படுவதற்காகத் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளுங்கள். கடவுள் உங்களைத் தம் பிள்ளைகளாக நடத்துகிறார். தந்தை தண்டித்துத் திருத்தாத பிள்ளை உண்டோ? இவ்வாறு திருத்தப்படுவது இப்போது மகிழ்ச்சிக்குரியதாய் இராமல், துயரத்துக்குரியதாகவே தோன்றும். ஆனால் பின்னர், இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் அமைதியையும் நேர்மையான வாழ்வையும் பயனாகப் பெறுவர். எனவே, "தளர்ந்துபோன கைகளைத் திடப்படுத்துங்கள், தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள்." "நீங்கள் நேர்மையான பாதையில் நடந்து செல்லுங்கள். "அப்போதுதான்

ஊனமாய்ப் போன கால்முட்டு பிசகாமல் குணமடையும். அனைவருடனும் அமைதியாய் இருக்க முயலுங்கள் தூய்மையை நாடுங்கள். தூய்மையின்றி எவரும் ஆண்டவரைக் காணமாட்டார். உங்களுள் எவரும் கடவுளின் அருளை இழந்துவிடாமலிருக்கப் பார்த்துக்கொள்ளுங்கள். கசப்பான நச்சுவேர் எதுவும் உங்களுக்குள் முளைத்து, தொல்லை கொடுக்காதபடியும் அதனால் பலர் கெட்டுப்போகாதபடியும் பார்த்துக் கொள்ளுங்கள்.

## நற்செய்தி: மாற்கு 6:1-6

அக்காலாத்தில் இயேசு அங்கிருந்து புறப்பட்டுத் தமது சொந்த ஊருக்கு வந்தார். அவருடைய சீடரும் அவரைப் பின் தொடர்ந்தனர். ஓய்வுநாள் வந்தபோது அவர் தொழுகைக்கூடத்தில் கற்பிக்கத் தொடங்கினார். அதைக் கேட்ட பலர் வியப்பில் ஆழ்ந்தனர். அவர்கள், ”இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன? என்னே இவருக்கு அருளப்பட்டுள்ள ஞானம்! என்னே இவருடைய கைகளால் ஆகும் வல்ல செயல்கள்! இவர் தச்சர் அல்லவா! மரியாவின் மகன்தானே! யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா? இவர் சகோதரிகள் இங்கு நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா?” என்றார்கள். இவ்வாறு அவரை ஏற்றுக் கொள்ள அவர்கள் தயங்கினார்கள். இயேசு அவர்களிடம், ”சொந்த ஊரிலும் சுற்றத்திலும் தம் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப் பெறுவர்” என்றார். அங்கே உடல் நலமற்றோர் சிலர்மேல் கைகளை வைத்துக் குணமாக்கியதைத் தவிர வேறு வல்ல செயல் எதையும் அவரால் செய்ய இயலவில்லை. அவர்களது நம்பிக்கையின்மையைக் கண்டு அவர் வியப்புற்றார். அவர் சுற்றிலுமுள்ள ஊர்களுக்குச் சென்று கற்பித்துவந்தார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் இயேசு தம் சீடர்களை நோக்கி “உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகின்றவர் உங்களுக்கு பணியாளராய் இருக்கட்டும்” என்று கூறுகின்றார் பிற இனத்தவரின் தலைவர்கள் மக்களை அடக்கி ஆளுகின்றார்கள். இப்படியான பதவி மோகம் என்பது அரசியலில் மட்டுமல்ல திரு அவையிலும் பங்கு பேரவையிலும் என எல்லா இடங்கிலும் இது இன்று நடந்துகொண்டுதான் இருக்கின்றது. இயேசுவின் படிப்பினைகளையும் அவரது இறையாட்சியின் திட்டத்தினையும் அவரது வாழ்வினையும் கற்றறிந்த அப்பெண்ணை விட ஒருபடி கீழே சென்று பதவிக்காகவும் புகழ்ச்சிக்காவும் தவறுகள் செய்ய துணிந்து விடுகின்றோம். பதவி என்பது பணி செய்யவும் தொண்டு செய்யவும் என்கின்றார் இயேசு. செபதேயுவின் மனைவி தன் மக்களுக்காக இயேசுவிடம் பதவிகள் வேண்டியபோது அவர் கேட்ட கேள்வி: “நான் குடிக்கப்போகும் துன்பக் கிண்ணத்தில் உங்களால் குடிக்க இயலுமா? யூதர்களின் நம்பிக்கையின்படி அப்பத்தைப் பகிர்வது ஆசீர்வாதங்களைப் பகிர்வதற்குச் சமம். கிண்ணத்தைப் பகிர்வது என்பது துன்பங்ளைப் பகிர்வதற்குச் சமம். இயேசு தம் சீடர்களிடம் தமது பாடுகளைப் பகிர்வதற்கு அவர்கள் ஆயத்தமா? என்று கேள்வி கேட்கின்றார். தாங்கள் சொல்வது என்னவென்று உணராமல் அவர்களும் “ஆம்” என்கின்றார்கள். இயேசுவோ அவர்களின் எதிர்கால



## நற்செய்தி: லூக் 11:29-32

மக்கள் வந்து கூடக்கூட இயேசு கூறியது “இந்தத் தீய தலைமுறையினர் அடையாளம் கேட்கின்றனர். இவர்களுக்கு யோனாவின் அடையாளத்தைத்தவிர வேறு அடையாளம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. யோனா நினிவே மக்களுக்கு அடையாளமாய் இருந்ததைப் போன்று மானிட மகனும் இந்தத் தலைமுறையினருக்கு அடையாளமாய் இருப்பார். தீர்ப்புநாளில் தென்னாட்டு அரசி இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார். ஏனெனில் அவர் சாலமோனின் ஞானத்தைக் கேட்க உலகின் கடைக்கோடியிலிருந்து வந்தவர். ஆனால் இங்கிருப்பவர் சாலமோனிலும் பெரியவர் அல்லவா! தீர்ப்பு நாளில் நினிவே மக்கள் இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார்கள். ஏனெனில் யோனா அறிவித்த செய்தியைக் கேட்டு அவர்கள் மனம் மாறியவர்கள். ஆனால் இங்கிருப்பவர் யோனாவைவிடப் பெரியவர் அல்லவா!

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் “உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்” என்று இயேசு கூறிய வார்த்தைகள் யூதர்களுக்குக் கோபத்தைத் தூண்டுகின்றது. அவர்கள்: “நாங்கள் யாருக்கும் அடிமைகளாகய் இருந்ததில்லை. ஏன் எங்களுக்கு விடுதலை?” என்று கேள்வி எழுப்புகின்றார்கள். யூதர்கள் சொல்லுவதில் தவறு ஏதுமில்லை, யூதர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு கடவுள் மட்டும் தான் அரசர். வேறு எவரையும் அரசராக அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. அவர்களின் உள்ளம் சுதந்திரமானதாக கடவுளை மட்டும் ஏற்றுக்கொள்வதாக இருந்தது. இந்த சுதந்திரத்தை அடிமைத்தனம் என்ற பெயரில் அவர்களிடமிருந்து யாரும் பறிக்கமுடியாது எனவேதான் அவர்கள் இப்படிச்சொல்கின்றார்கள். இயேசு இங்கு அடிமைத்தனம் என்று சுட்டிக்காட்டுவது, இந்த உலகம் சார்ந்த அடிமைத்தனம் அல்ல, அது பாவம் சார்ந்த அடிமைத்தனம். பாவத்திற்கு அடிமைகளாக இருக்கின்றவர்கள் தங்களின் கட்டுப்பாட்டை இழந்துவிடுகின்றார்கள். பாவம் தான் அவர்களுக்கு எசமானாக இருக்கின்றது. பாவம் அவர்களை ஆட்டுவிக்கின்றது, ஓர் அடிமை என்கின்றவன் தனது தலைவன் என்ன சொல்கின்றானோ அதைச் செய்கின்றான். அதே போலதான் பாவம் செய்கின்றவன் தனக்கு தலைவனாக இருக்ககூடிய பாவத்திற்கு அடிமையாக இருக்கின்றான். இயேசு இங்கு ஓர் உருவகத்தைப் பயன்படுத்துகின்றார், மகன் மற்றும் அடிமை. மகனுக்கு வீட்டில் நிலையான இடம் இருக்கின்றது. ஆனால் அடிமையின் நிலை அப்படி அல்ல. அவன் எந்த நேரமும் வீட்டிலிருந்து துரத்தப்படலாம். அதேபோல தங்களை ஆபிரகாமின் வழிமரபினர், என்றும் தாங்கள் ஆபிரகாமின் மக்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் விண்ணகத்திற்குச் சென்றுவிடலாம் என்று நினைக்க முடியாது. அவர்கள் பாவத்திற்கு அடிமையானால், கடவுளின் மக்கள் என்கின்ற நிலையிலிருந்து துரத்தப்படுவார்கள். விண்ணக வாழ்வை இழந்துவிடுவார்கள். எனவேதான் பாவம் அவர்களை அடிமைநிலைக்கு உட்படுத்தாதபடிக்கு எச்சரிக்கையாக இருப்பதற்கு

தாகம் எல்லா நிலையிலும் வளர்த்திருக்க வேண்டும், உயர்ந்திருக்க வேண்டும், சிறந்திருக்க வேண்டும், என்று அவர் விரும்புகிறார். நம்முடைய செப தாகம், செப ஏக்கம் உயர்ந்திருக்க, சிறந்திருக்க, வேண்டும் என்று விரும்புகிற தெய்வம் நமக்கு அழகாய் கற்றுத்தருகிறார். போற்றுவதற்கும், புகழுவதற்கும், ஆண்டவருக்காக காத்திருக்கிறோம், என அறிக்கையிடுவதற்கும், விண்ணப்பங்களை, வேண்டுதல்களை, அவர் பாதம் கொடுக்கவும் குற்றங்களை மன்னியுங்கள் என்று மன்னிப்பு கேட்கவும், பாதுகாப்பிற்காக மன்றாடவும், நமக்கு கற்றுக்கொடுக்கிறார். இந்த கற்றுக்கொடுத்த வார்த்தைகளில் வளருவோம். ஆண்டவரைத் துதிப்போம். ஆண்டவரைப் போற்றுவோம், அவருடைய வருகைக்காக அரசாட்சிக்காக, காத்திருப்போம். வேண்டுதல்களை, விண்ணப்பங்களை கொடுப்போம். பிறர் குற்றங்களை மன்னிப்போம், அவருடைய பாதுகாப்பை நிறைவாக பெற்றுக்கொள்வோம். அவர் ஆசீர்வதிப்பாராக. ஆமென்

## பெப்ரவரி – 24 – புதன்

**தூய மார்தா அருளப்பர்**

---------------------------------------------------------------

### முதல் வாசகம்: யோனா 3:1-10

இரண்டாம் முறையாக யோனாவுக்கு ஆண்டவரின் வாக்கு அருளப்பட்டது. அவர், “நீ புறப்பட்டு நினிவே மாநகருக்குப் போய், நான் உன்னிடம் சொல்லும் செய்தியை அங்குள்ளோருக்கு அறிவி” என்றார். அவ்வாறே யோனா புறப்பட்டு ஆண்டவரது கட்டளைப்படி நினிவேக்குச் சென்றார். நினிவே ஒரு மாபெரும் நகர். அதைக்கடக்க மூன்றுநாள் ஆகும். யோனா நகருக்குள் சென்று, ஒரு நாள் முழுதும் நடந்தபின், உரத்த குரலில், “இன்னும் நாற்பது நாளில் நினிவே அழிக்கப்படும்” என்று அறிவித்தார். நினிவே நகர மக்கள் கடவுளின் செய்தியை நம்பி, எல்லாரும் நோன்பிருக்க முடிவு செய்தார்கள். பெரியோர் சிறியோர் அனைவரும் சாக்கு உடை உடுத்திக் கொண்டனர். இந்தச் செய்தி நினிவே அரசனுக்கு எட்டியது. அவன் தன் அரியணையை விட்டிறங்கி, அரச உடையைக் களைந்துவிட்டு, சாக்கு உடை உடுத்திக்கொண்டு, சாம்பல் மீது உட்காந்தான். மேலும் அவன் ஓர் ஆணை பிறப்பித்து அதை நினிவே முழுதும் பறைசாற்றச் செய்தான். இதனால் அரசரும் அரச அவையினரும் மக்கள் அனைவருக்கும் அறிவிப்பதாவது எந்த மனிதரும் உணவைச் சுவைத்துக்கூடப் பார்க்கக் கூடாது. ஆடு, மாடு முதலிய விலங்குகளும் தீனி தின்னவோ தண்ணீர் குடிக்கவோ கூடாது. மனிதரும் விலங்குகளும் சாக்கு உடை உடுத்திக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொருவரும் கடவுளை நோக்கி மன்றாட வேண்டும் தம் தீய வழிகளையும், தாம் செய்துவரும் கொடுஞ்செயல்களையும் விட்டொழிக்க வேண்டும். இவ்வாறு செய்தால், கடவுள் ஒருவேளை தம் மனத்தை மாற்றிக் கொள்வார் அவரது கடுஞ்சினமும் தணியும் நமக்கு அழிவு வராது.” கடவுள் அவர்கள் செய்தது அனைத்தையும் பார்த்தார். அவர்கள் தீய வழிகளினின்று விலகியதை அவர் கண்டு, தம் மனத்தை மாற்றிக் கொண்டார் தாம் அவர்கள்மீது அனுப்புவதாகச் சொல்லியிருந்த தண்டனையை அனுப்பவில்லை



பணிவாழ்வை மனதில் கொண்டு “ஆம் என் கிண்ணத்தில் நீங்கள் குடிப்பீர்கள்” என்றார். யாக்கோபும் யோவானும் இயேசுவின் நல்ல சீடர்கள் அவர்கள் இயேசுவுடன் அப்பத்தையும் பகிர்ந்தனர் துன்பக் கிண்ணத்தையும் பகிர்ந்தனர் அவரது அன்பையும் ஆசீர்வாதங்களையும் பகிர்ந்து கொண்டனர். அதுபோல அவரது பாடுகளிலும் துன்பங்களிலும் பங்கெடுத்தனர். உண்மையான உறவுகள் அப்படித்தான் இருக்கவேண்டும். இன்பத்திலும் துன்பத்திலும் பங்குகொள்வதுதான் நல்ல உறவாகும். இன்று நமது உறவுகளை ஆய்வு செய்து அவர்களின் துன்பக் கிண்ணத்தில் குடிக்கவும் அவர்களின் துன்பங்களை பகிர்ந்து கொண்டு வாழ அருள் தாரும் இயேசுவே ஆமென்.

## பெப்ரவரி – 04 –வியாழன்

இலங்கை மாதா திருநாள் - தூய அருளானந்தர்

---------------------------------------------------------------

### முதல் வாசகம்: எபி 12:18-19, 21-24

நீங்கள் வந்து சேர்ந்திருப்பது தொட்டுணரக்கூடிய, தீப்பற்றியெரிகின்ற, இருள்சூழ்ந்த, மந்தாரமான, சுழல்காற்று வீசுகின்ற சீனாய் மலை அல்ல. அங்கு எக்காளம் முழங்கிற்று பேசும் குரலொன்று கேட்டது. அக்குரலைக் கேட்டவர்கள் அதற்குமேல் தங்களோடு அது ஒரு வார்த்தைகூடப் பேசவேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்கள். “நான் அஞ்சி நடுங்குகிறேன்” என்று மோசேயே சொல்லுமளவுக்கு அக்காட்சி அச்சம் விளைவித்தது. ஆனால் நீங்கள் வந்து சேர்ந்திருக்கும் சீயோன் மலை வாழும் கடவுளின் நகர் விண்ணக எருசலேம். அதனைப் பல்லாயிரக் கணக்கான வானதூதர் சூழ்ந்துள்ளனர். விண்ணகத்தில் பெயர் எழுதப்பட்டுள்ள தலைப்பேறானவர்களின் திருச்சபை விழாக் கூட்டமென அங்கே கூடியுள்ளது. நிறைவுபெற்ற நேர்மையாளர்களோடு சேர்ந்து, அனைவருக்கும் நடுவரான கடவுள் முன்னிலையிலும், புதியதோர் உடன்படிக்கையின் இணைப்பாளராகிய இயேசுவின் முன்னிலையிலும் நிற்கிறீர்கள். ஆபேலின் இரத்தத்தைப் போலன்றிச் சிறந்த முறையில் குரலெழுப்பும் இயேசுவின் இரத்தத்தினால் தெளிக்கப்பட்டிருக்கிறீர்கள்.

### நற்செய்தி: மாற்கு 6: 7-13

அப்பொழுது இயேசு பன்னிருவரையும் தம்மிடம் வரவழைத்து, அவர்களை இருவர் இருவராக அனுப்பத் தொடங்கினார். அவர்களுக்குத் தீய ஆவிகள் மீது அதிகாரமும் அளித்தார். மேலும், ”பயணத்திற்குக் கைத்தடி தவிர உணவு, பை, இடைக்கச்சையில் செப்புக் காசு முதலிய வேறு எதையும் நீங்கள் எடுத்துக் கொண்டு போக வேண்டாம். ஆனால் மிதியடி போட்டுக் கொள்ளலாம் அணிந்திருக்கும் அங்கி ஒன்றே போதும்” என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். மேலும் அவர், ”நீங்கள் எங்கேயாவது ஒரு வீட்டுக்குள் சென்றால், அங்கிருந்து புறப்படும்வரை அவ்வீட்டிலேயே தங்கியிருங்கள். உங்களை எந்த

ஊராவது ஏற்றுக் கொள்ளாமலோ உங்களுக்குச் செவி சாய்க்காமலோ போனால் அங்கிருந்து வெளியேறும் பொழுது, உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிடுங்கள். இதுவே அவர்களுக்கு எதிரான சான்றாகும்" என்று அவர்களுக்குக் கூறினார் அப்படியே அவர்கள் புறப்பட்டுச் சென்று மக்கள் மனம் மாற வேண்டுமென்று பறைசாற்றினார்கள். பல பேய்களை ஓட்டினார்கள் உடல் நலமற்றோர் பலரை எண்ணெய் பூசிக் குணப்படுத்தினார்கள்.

**தியானம்:** நாம் சோதனையின் காலத்தில் இருக்கின்றோம். பலவிதமான சோதனைகள் எம்முன் உள்ளது. அதுவும் விசேட-மாக இந்த கொள்ளை நோயின் தாக்கம் பலரையும் பல விதத்தில் பாதித்துள்ளது. மன ரீதியாக பல பாதிப்புகளை உண்டுபண்ணியுள்ளது. ஆலயங்களுக்கு செல்ல முடியாத நிலை. தொலைத்தொடர்பினூடான பூசையில் முழு நிறைவைக் காண முடியவில்லை. இரவு நேர ஊரடங்கு என்பது எமது கனடா தேசத்தில் நமக்கு மிகவும் புதிது. இவ்வாறான மன நிலையில் இறையரசை எவ்வாறு எம்மால் அறிவிக்க முடியும்? இன்றைய நற்செய்தியில் யேசு தம் சீடரை படைப்பிற்கு நற்செய்தியை அறிவிக்க அனுப்புகிறார். அவர்கள் தமது பணியை திறம்பட செய்தார்கள். அதனால்தான் இன்றும் கிறிஸ்த்தவம் பரந்து விரிந்து வாழ்ந்துகொண்டிருக்கிறது. முதல் வாசகத்துஇல் கூறப்பட்டதுபோல் நாம் வாழும் கடவுளின் மலைக்கு செல்ல அழைக்கப் பட்டுள்ளோம். அதற்கு செல்ல நாம் தகுதியுள்ளவர்களா? எமது வாழ்வில் நாம் செய்யும் சின்ன சின்ன அதவறுகள்கூட எம்மை கடவுளிடமிருந்து பிரித்து விடுகிறது. எனவே மிகவும் கவனமாக இருக்க வேண்டும், செயற்பட வேண்டும். முயற்சி செய்வோமா?

## பெப்ரவரி – 05 –வெள்ளி

**புனித அகத்தா**

---

### முதல் வாசகம்: எபி 13:1-8

சகோதர அன்பில் நிலைத்திருங்கள். அன்னியரை வரவேற்று விருந்தோம்ப மறவாதீர்கள். இவ்வாறு விருந்தோம்பியதால் சிலர் தாங்கள் அறியாமலே வான தூதர்களை மகிழ்ச்சிப்படுத்தியதுண்டு. சிறைப்பட்டவர்களோடு நீங்களும் சிறைப்பட்டருப்பதாக எண்ணி அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள். துன்புறக்கூடிய உடல் உங்களுக்கும் உள்ளதால், துன்புறுத்தப்படுபவர்களை மறவாதீர்கள். திருமணத்தை அனைவரும் உயர்வாக மதியுங்கள். மணவறைப் படுக்கை மாசுறாமல் இருக்கட்டும். காமுகரும் விபசாரத்தில் ஈடுபடுவோரும் களவுளின் தீர்ப்புக்கு ஆளாவர். பொருளாசையை விலக்கி வாழுங்கள். உள்ளதே போதும் என்றிருங்கள். ஏனெனில், "நான் ஒருபோதும் உன்னைக் கைவிடமாட்டேன்! உன்னை விட்டு விலகமாட்டேன்" என்று கடவுளே கூறியிருக்கிறார்.



## பெப்ரவரி – 23 – செவ்வாய்

**தூய பொலிக்கார்ப்**

---

### முதல் வாசகம்: எசா 55:10-11

மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன் அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பி வளரச் செய்து, விதைப்பவனுக்கு விதையையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல், அங்குத் திரும்பிச் செல்வதில்லை. அவ்வாறே, என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தைச் செயல்படுத்தி, எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை.

### நற்செய்தி: மத் 6:7-15

மேலும் நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது பிற இனத்தவரைப் போலப் பிதற்ற வேண்டாம் மிகுதியான சொற்களை அடுக்கிக் கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் அவர்களைப் போல் இருக்க வேண்டாம். ஏனெனில் நீங்கள் கேட்கும் முன்னரே உங்கள் தேவையை உங்கள் தந்தை அறிந்திருக்கிறார். ஆகவே, நீங்கள் இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்" விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக! இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவியும். ("ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமக்கே. ஆமென்.") மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார். மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்.

**தியானம்:** இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே, இன்றைய நாளிலே, ஆண்டவர் நம்மை நம் வாழ்வை உற்றுப்பார்க்கிறார். உற்றுப்பார்க்கிற தெய்வம் நமக்கு திருத்தங்களை கொடுக்கிறார். நமக்கு திருத்தங்களை கொடுக்கிற தெய்வம் நம்முடைய குடும்பங்களை, குடும்ப சூழ்நிலைகளை உயர்த்த ஆசைப்படுகிறார். நம்முடைய குடும்பங்களை, குடும்ப சூழ்நிலைகளை உயர்த்த ஆசைப்படுகிற தெய்வம் நமக்கு பல்வேறு காரியங்களை கற்றுக் கொடுக்கிறார். ஆம் இன்றைய நாளிலே அவர் நமக்கு எப்படி செபிக்க வேண்டும், என்னென்ன வார்த்தைகளை நாம் பயன்படுத்தி செபிக்க வேண்டும் என்று நமக்கு கற்றுக்கொடுக்கிறார். இதன் அர்த்தமும் ஆழமும் அவர் நம்முடைய செபத்தை நம்முடைய செபவாழ்வை உறுதிப்படுத்த ஆழப்படுத்த விரும்புகிறார். நம்முடைய செப வாழ்வு நம்முடைய செப ஏக்கம், செப

விருப்போடு பணிசெய்யுங்கள். உங்களிடம் ஒப்படைக்கப்பட்டவர்களை அடக்கி ஆளாமல் மந்தைக்கு முன்மாதிரிகளாய் இருங்கள். தலைமை ஆயர் வெளிப்படும்போது, அழியா மாட்சியுள்ள முடியைப் பெற்றுக்கொள்வீர்கள்.

## நற்செய்தி: மத்தேயு 16:13-19

அக்காலத்தில் இயேசு, பிலிப்புச் செசரியா பகுதிக்குச் சென்றார். அவர் தம் சீடரை நோக்கி, ”மானிடமகன் யாரென்று மக்கள் சொல்கிறார்கள்?” என்று கேட்டார்.அதற்கு அவர்கள், ”சிலர் திருமுழுக்கு யோவான் எனவும் வேறு சிலர் எலியா எனவும் மற்றும் சிலர் எரேமியா அல்லது பிற இறைவாக்கினருள் ஒருவர் என்றும் சொல்கின்றனர்” என்றார்கள்.”ஆனால் நீங்கள், நான் யார் எனச் சொல்கிறீர்கள்?” என்று அவர் கேட்டார்.சீமோன் பேதுரு மறுமொழியாக, ”நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்” என்று உரைத்தார். அதற்கு இயேசு, ”யோனாவின் மகனான சீமோனே, நீ பேறு பெற்றவன்.ஏனெனில் எந்த மனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை மாறாக விண்ணகத்திலுள்ள என் தந்தையே வெளிப்படுத்தியுள்ளார்.எனவே நான் உனக்குக் கூறுகிறேன் உன் பெயர் பேதுரு இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றி கொள்ளா.விண்ணரசின் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடைசெய்வது விண்ணுலகிலும் தடைசெய்யப்படும். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்” என்றார்.

**தியானம்:** இன்றைய நாளில் ஆண்டவர் நம்மை சீடர்களாக,சீடத்திகளாக, வாழ அழைக்கிறார். நம்முடைய வாழ்வானது, நம்முடைய குடும்பமானது அவரோடு இணைந்திருக்க வேண்டும், அவருக்காக என்று அவருடைய பணிக்காக என்று, அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர வேண்டும் என்று அழைக்கிறார். ஆம் ஆண்டவருடைய வார்த்தை நமக்கு சொல்லுகிறது. உலகெங்கும் சென்று நற்செய்தியை அறிவியுங்கள். அர்த்தம் நம்முடைய பணி வாழ்வு நம்முடைய எடுத்துக்காட்டான கிறிஸ்தவ சாட்சியம் ஒருகாலமும் ஒரு போதும், ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குளாய் ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்குள்ளாய் நிறைவடைவது அல்ல அது பரந்து விரிய வேண்டிய ஒன்று, எல்லா இடங்களுக்கும் செல்ல வேண்டிய ஒன்று, எல்லா இடங்களிலும், அறிவிக்கப்பட வேண்டிய ஒன்று. இன்றைக்கு கத்தோலிக்க திருச்சபை வளர்ந்திருக்கிறது உயர்ந்ததிருக்கிறது, என்று சொன்னால் அதற்கு காரணம் நற்செய்தியை அறிவித்தது, ஆண்டவரின் வார்த்தையை அறிவித்தது. இன்றைக்கு நாம் இந்த திருச்சபையின் அங்கத்தவர்காக இருக்கிறோம். இன்றைய நாள் வாசகம் நம்மை அழைக்கிறது, நாமும் கத்தோலிக்க விசுவாசத்தைக் கட்டி எழுப்புகிற தூண்களாக இருக்க, கத்தோலிக்க விசுவாசத்தைக் கட்டி எழுப்புகிற முக்கியமான நபர்களாக மாற வேண்டும் என்று நற்செய்திப்பணிக்கு நம்மை அழைக்கிறார். ஆண்டவருடைய வார்த்தையை எடுத்துரைத்து, ஆண்டவருக்குள்ளாய் வளர்ந்து நற்செய்தி தூதுவர்களாக மாறுவோம்.



## நற்செய்தி: மாற்கு 6:14-29

இயேசுவின் பெயர் எங்கும் பரவியது. ஏரோது அரசனும் அவரைப் பற்றிக் கேள்வியுற்றான். சிலர், ”இறந்த திருமுழுக்கு யோவான் உயிருடன் எழுப்பப்பட்டு விட்டார் இதனால் தான் இந்த வல்ல செயல்கள் இவரால் ஆற்றப்படுகின்றன” என்றனர்.வேறு சிலர், ”இவர் எலியா” என்றனர். மற்றும் சிலர், ”ஏனைய இறைவாக்கினரைப்போல் இவரும் ஓர் இறைவாக்கினரே” என்றனர்.இதைக் கேட்ட ஏரோது, ”இவர் யோவானே. அவர் தலையை நான் வெட்டச் செய்தேன். ஆனால் அவர் உயிருடன் எழுப்பப்பட்டு விட்டார்” என்று கூறினான்.இதே ஏரோது, தன் சகோதரனான பிலிப்பின் மனைவி ஏரோதியாவை மனைவியாக்கிக் கொண்டிருந்தான் அவள் பொருட்டு ஆளனுப்பி யோவானைப் பிடித்துக் கட்டிச் சிறையில் அடைத்திருந்தான்.ஏனெனில் யோவான் ஏரோதிடம், ”உம் சகோதரர் மனைவியை நீர் வைத்திருப்பது முறை அல்ல” எனச் சொல்லிவந்தார்.அப்போது ஏரோதியா அவர்மீது காழ்ப்புணர்வு கொண்டு, அவரைக் கொலைசெய்ய விரும்பினாள் ஆனால் அவளால் இயலவில்லை.ஏனெனில் யோவான் நேர்மையும் தூய்மையும் உள்ளவர் என்பதை ஏரோது அறிந்து அஞ்சி அவருக்குப் பாதுகாப்பு அளித்து வந்தான். அவர் சொல்லைக்கேட்டு மிகக் குழப்பமுற்ற போதிலும், அவருக்கு மனமுவந்து செவிசாய்த்தான். ஒருநாள் ஏரோதியாவுக்கு நல்ல வாய்ப்பு ஒன்று கிடைத்தது. ஏரோது தன் பிறந்த நாளில் அரசவையினருக்கும், ஆயிரத்தவர் தலைவர்களுக்கும் கலிலேய முதன்மைக் குடிமக்களுக்கும் ஒரு விருந்து படைத்தான்.அப்போது ஏரோதியாவின் மகள் உள்ளே வந்து நடனமாடி ஏரோதையும் விருந்தினரையும் அகமகிழச் செய்தாள். அரசன் அச்சிறுமியிடம், ”உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள், தருகிறேன்” என்றான். ”நீ என்னிடம் எதுகேட்டாலும், ஏன் என் அரசில் பாதியையே கேட்டாலும் உனக்குத் தருகிறேன்” என்றும் ஆணையிட்டுக் கூறினான்.அவள் வெளியே சென்று, ”நான் என்ன கேட்கலாம் ?” என்று தன்தாயை வினவினாள். அவள், ”திருமுழுக்கு யோவானின் தலையைக் கேள்” என்றாள்.உடனே சிறுமி அரசனிடம் விரைந்து வந்து, ”திருமுழுக்கு யோவானின் தலையை ஒருதட்டில் வைத்து இப்போதே எனக்குக் கொடும்” என்று கேட்டாள். இதைக்கேட்ட அரசன் மிக வருந்தினான். ஆனாலும் விருந்தினர்முன் தான் ஆணையிட்டதால் அவளுக்கு அதை மறுக்க விரும்பவில்லை.உடனே அரசன் ஒரு காவலனை அனுப்பி யோவானுடைய தலையைக் கொண்டுவருமாறு பணித்தான். அவன் சென்று சிறையில் அவருடைய தலையை வெட்டி, அதை ஒருதட்டில் கொண்டுவந்து அச்சிறுமியிடம் கொடுக்க, அவளும் அதைத் தன் தாயிடம் கொடுத்தாள்.இதைக் கேள்வியுற்ற யோவானுடைய சீடர்கள் வந்து அவருடைய உடலை எடுத்துச் சென்று ஒரு கல்லறையில் வைத்தார்கள்.

**தியானம்:** நான் ஒரு போதும் உன்னை கைவிடமாட்டேன் உன்னைவிட்டு விலகமாட்டேன்”(எபி.13:5) என்று முதல் வாசகத்தில் பார்பது போல் படைப்பின் காரரான ஆண்டவர், பிறந்திருக்கும் புதுவருடத்திலும் “அஞ்சாதீர்கள்” எந்த வேளையிலும் உங்கள் கூடவே நான் இருக்கிறேன், உங்களை நான் காப்பாற்றுவேன், உங்களை நான் வழிநடத்துவேன், உங்களுக்கு ஆசீர் வழங்குவேன். என்று எங்களுக்கு

வாக்குறுதியை அழித்திருக்கிறார். அவரது ஆசீரைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நாங்கள் தூய்மையானவர்களாக, பிறருடன் பகிர்ந்து வாழும் மனநிலையைப் பெற்றுக் கொள்ள வேண்டும், அவர்களுக்கு ஏற்படும் கஸ்டங்கள், துன்பங்கள், வேதனைகள், அனைத்தும் எங்களுக்கு நிகழ்ந்துள்ளது என்று உணாந்தவர்களாக அவர்களுக்கு ஆறுதல் கூறி அன்பினைப் பகிர்ந்துவாழ வேண்டுமென்று அவர் விரும்புகின்றார். ஆனால் நாங்களோ அன்பினை மறந்தவர்களாக நான், எனது குடும்பம், எனது பிள்ளைகள் என்று யாவற்றையும் எமக்குரியதாக்கிக் கொள்கின்றோம், எமது சிந்தனைகள், தீய சொற்கள், அருவருப்பான செயல்கள் இவற்றினால் எமது வாழ்வின் புனிதத்துவத்தை அழித்துவிடுகிறோம். அப்புனிதத்துவத்தை திருமணம் என்னும் அருட்சாதனத்தின் மூலம் வெளிப்படுத்தி கறைபடியாமல் காத்துக் கொள்ளுமாறு எங்களுக்கு அறிவுறுத்துகிறார். நற்செய்தி வாசகத்திலும் இறைவன் கொடுத்த கட்டளைகளில் ஒன்றான பிறர்தாரத்தை விரும்பாதே என்ற கட்டளையை கடைப்பிடிக்காதவராக தனது சகோதரன் பிலிப்பின் மனைவியாகிய ஏரோதியாவை மணந்து மனைவியாக்கிக் கொண்டு திருமணத்தின் கணவன் மனைவி என்ற புனிதத்தை கறைபடுத்திவிடுகிறார். (மாற். 6:17 ) இன்று எங்கள் மத்தியிலும் இவ்வாறான கொலை, கொள்ளை, கற்பழிப்பு. காம உணர்வு. முறையற்ற தொடர்புகள் இவ்வாறானவை நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இறைவன் இவ்வாறான வாழ்க்கை முறையை வெறுக்கிறார். அவர் எங்களைத் தண்டிப்பவரல்ல மாறாக தண்டித்துத் திருத்துகிறவர். ஆனால் அவருக்கு விருப்பமற்று மீண்டும் மீண்டும் பாவத்தின் நிமித்தம் அவரைத் துன்புறுத்துவோமேயானால் தண்டனைத்தீர்ப்பு நிற்சயம் உண்டு. தற்பொழுது உலக நாடெங்கும் பரவிக்கொண்டிருக்கும் கொரோனா தொற்று நோய், புயல் காற்று இவ்வாறான இயற்கை அழிவுகள் ஏன்? எதற்காக? என்று சிந்தித்துப் பார்த்தால் எமது பாவங்கள் முக்கிய காரணமாக அமைகின்றது. இப்பாவங்களுக்காக மனம்வருந்தி அவரிடம் வந்தோமேயானால் அன்று நினிவே நகர மக்கள் இறைவனின் வார்த்தைக்கிணங்க பாவத்தை உணர்ந்தவர்களாக சாக்கு உடை உடுத்து, உண்ணா நோன்பிருந்து அழிவிலிருந்து காப்பாற்றும் படியாக மன்றாடினர்கள், இறைமகன் இயேசு அவர்களை மன்னித்து புதியதொரு வாழ்வை கட்டளையிடுகின்றார். எனவே நாங்களும் எமது பாவங்களை உணர்ந்தவர்களாக உலய காரியங்களுக்கு எமது நேரங்களை செலவிடாமல். இறைவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்களாக அனுதினமும் இறைவார்த்தையை வாசித்து தியானத்து மனமாற்றம் பெற்றவர்களாக புதுவாழ்வு வாழ யாவற்றையும் இறைவன் பாதம் ஒப்படைப்போம்

## பெப்ரவரி – 06 – சனி

**தூய கொன்சாலோ கார்சியா**

---

**முதல் வாசகம்: எபி 13: 15-17.20-21**

ஆகவே, அவர் வழியாக எப்போதும் நாம் கடவுளுக்குப் புகழ்ச்சிப்பலியைச் செலுத்துவோமாக, அவருடைய பெயரை



உடனே தூய ஆவியால் அவர் பாலைநிலத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார். பாலை நிலத்தில் அவர் நாற்பது நாள் இருந்தார் அப்போது சாத்தானால் சோதிக்கப்பட்டார் அங்குக் காட்டு விலங்குகளிடையே இருந்தார். வானதூதர் அவருக்குப் பணிவிடை செய்தனர். யோவான் கைதுசெய்யப்பட்டபின், கடவுளின் நற்செய்தியைப் பறைசாற்றிக் கொண்டே இயேசு கலிலேயாவிற்கு வந்தார். காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது் மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்” என்று அவர் கூறினார்.

**தியானம்:** இன்று தவக்காலத்தின் முதலாம் ஞாயிறு. தவக்காலம் என்பது இறை இரக்கத்தின் காலம். எமது ஆன்மீக வாழ்வில் முழு வளர்ச்சி பெற பல நிலைகளை(சோதனைகளை) கடந்து செல்ல வேண்டும் என்பதை இன்றைய இறை வார்த்தைப் பகுதிகள் தெளிவு படுத்துகின்றன. குறிப்பாக நற்செய்தி வாசகத்தில் யேசு திருமுழுக்கு பெற்று தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டவராய் பாலைவனத்தில் சாத்தானால் சோதிக்கப் பட்டார். சோதனையை வென்றதையும், தூய ஆவியானவர் யேசுவின் வாழ்வில் வல்லமையோடு செயல்பட்டதையும் நாம் காண்கிறோம். எம் எல்லோருக்கும் சோதனை வருவது உண்மை. ஆனால் அது தவிர்க்க முடியாதது என்றும், அதனை வெல்வது கடினம் என்றும் கூறி, அதற்கு இசைந்து போவது அழிவின் பாதையில் நாம் அடியெடுத்து வைப்பதாகவே உள்ளது. மனித வாழ்க்கையில் சோதனை பின்னிப் பிணைந்து இருக்கிறது. அது ஒரு நோக்கத்தோடு கடவுளால் அனுமதிக்கப் படுகின்றது. மனிதன் சரியானதை தீர்மானிக்கவும், மாறாக அதைவிட்டு விலகி தவறானதை தேர்ந்து கொள்ளும்போது அவன் துன்பப்படவும் கடவுளால் திட்டமிடப்பட்டது. நற்செய்தியில் சோதனை-களை வெற்றி கொள்ளும் வழியை யேசு காட்டுகிறார். 2வது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல எம்மை கடவுளிடம் கொண்டு சேர்க்கவே அவர் இறந்தார். நீதியுள்ளவராகிய அவர் நீதியுள்ளவர்களுக்காக இறந்தார். தமது பரிசுத்த ஆவியை எம்மீது பொழிந்துள்ளார். ஆகவேதான் நாமும் இறுதிக்காலம் இதுவே என்பதை உணர்ந்தவர்களாக தூய ஆவியானவரின் துணையோடு எமது சோதனைகளை வெற்றி கொள்வோம். நாம் தேடுகின்ற இறையருளை பெற்றுக்கொள்வோம்!

## பெப்ரவரி – 22 –திங்கள்

**பேதுருவின் தலைமைப் பீடம்**

---

**முதல் வாசகம்: 1 பேதுரு5:1-4**

பிள்ளைகளே! கிறிஸ்துவின் துன்பங்களுக்குச் சாட்சியும், வெளிப்படவிருக்கும் மாட்சியில் பங்கு கொள்ளப்போகிற வனுமாகிய நான், உடன்மூப்பன் என்னும் முறையில் மூப்பர்களுக்குக் கூறும் அறிவுரை: உங்கள் பொறுப்பிலிருக்கும் கடவுளின் மந்தையை நீங்கள் மேய்த்துப் பேணுங்கள் கட்டாயத்தினால் அல்ல, கடவுளுக்கேற்ப மன உவப்புடன் மேற்பார்வை செய்யுங்கள் ஊதியத்திற்காகச் செய்யாமல்,

# பெப்ரவரி – 21 – தவக்காலத்தின் 1ம் ஞாயிறு

---

## முதல் வாசகம்: தொநூ 9:8-15

கடவுள் நோவாவிடமும் அவருடனிருந்த அவர் புதல்வரிடமும் கூறியது. "இதோ! நான் உங்களோடும் உங்களுக்குப் பின்வரும் உங்கள் வழிமரபினரோடும் பேழையிலிருந்து வெளிவந்து உங்களோடிருக்கும் உயிரினங்கள், பறவைகள்,கால்நடைகள், நிலத்தில் உங்களுடன் உயிர்வாழும் விலங்கினங்கள் எல்லாவற்றோடும், மண்ணுலகில் உள்ள எல்லா உயிர்களோடும் என் உடன்படிக்கையை நிலைநாட்டுகிறேன். உங்களோடு என் உடன்படிக்கையை நிறுவுகிறேன் சதையுள்ள எந்த உயிரும் வெள்ளப் பெருக்கால் மீண்டும் அழிக்கப்படாது. மண்ணுலகை அழிக்க இனி வெள்ளப் பெருக்கு வரவே வராது." அப்பொழுது கடவுள், "எனக்கும் உங்களுக்கும் உங்களுடன் இருக்கும் உயிருள்ள எல்லாவற்றிற்குமிடையே தலைமுறைதோறும் என்றென்றும் இருக்கும்படி, நான் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அடையாளமாக, என் வில்லை மேகத்தின்மேல் வைக்கிறேன். எனக்கும் மண்ணுலகுக்கும் இடையே உடன்படிக்கையின் அடையாளமாக இது இருக்கட்டும். மண்ணுலகின் மேல் நான் மேகத்தை வருவிக்க, அதன்மேல் வில் தோன்றும்பொழுது, எனக்கும் உங்களுக்கும் சதையுள்ள உயிரினங்கள் எல்லாவற்றுக்கும் இடையே உள்ள என் உடன்படிக்கையை நான் நினைவுகூர்வேன். உயிர்கள் எல்லாவற்றையும் அழிப்பதற்குத் தண்ணீர் இனி ஒருபோதும் பெருவெள்ளமாக மாறாது.

## இரண்டாம் வாசகம்: 1பேது 3:18-22

கிறிஸ்துவும் உங்கள் பாவங்களின் பொருட்டு ஒரே முறையாக இறந்தார். அவர் உங்களைக் கடவுளிடம் கொண்டு சேர்க்கவே இறந்தார். நீதியுள்ளவராகிய அவர் நீதியற்றவர்களுக்காக இறந்தார். மனித இயல்போடிருந்த அவர் இறந்தாரெனினும் ஆவிக்குரிய இயல்புடையவராய் உயிர் பெற்றெழுந்தார். அந்நிலையில் அவர் காவலில் இருந்த ஆவிகளிடம் போய்த் தம் செய்தியை அறிவித்தார். நோவா பேழையைச் செய்து கொண்டிருந்த நாள்களில், பொறுமையோடு காத்துக் கொண்டிருந்த கடவுளை அந்த ஆவிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. சிலர், அதாவது, எட்டுப்பேர் மட்டும் அந்தப் பேழையில், தண்ணீர் வழியாகக் காப்பாற்றப்பட்டனர். அந்தத் தண்ணீரானது திருமுழுக்கிற்கு முன்னடையாளம். இத்திருமுழுக்கு உடலின் அழுக்கைப் போக்கும் செயல் அல்ல் அது குற்றமற்ற மனச்சான்றுடன் கடவுளுக்குத் தரும் வாக்குறுதியாகும் இது இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வழியாக இப்போது உங்களுக்கு மீட்பளிக்கிறது. அவர் வான தூதர்களையும் அதிகாரங்களையும் வல்லமைகளையும் தமக்குப் பணிய வைத்து, விண்ணுலகம் சென்று, கடவுளின் வலப்பக்கத்தில் இருக்கிறார்.

## நற்செய்தி: மாற்1:12-15



அறிக்கையிடுவதன் வழியாக நம் உதடுகள் செலுத்தும் காணிக்கையே இப்புகழ்ச்சிப் பலியாகும். நன்மை செய்யவும் பகிர்ந்து வாழவும் மறவாதீர்கள். இவ்வகைப் பலிகளே கடவுளுக்கு உகந்தவை. உங்கள் தலைவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள் அவர்களுக்குப் பணிந்திருங்கள். அவர்கள் உங்களைப்பற்றிக் கணக்கு கொடுக்கவேண்டியிருப்பதால் உங்கள் நலனில் விழிப்பாயிருக்கிறார்கள். இப்பணி அவர்களுக்கு மகிழ்ச்சியுள்ளதாய் இருக்கும்படி நடந்து கொள்ளுங்கள். அவர்களுக்கு மனத்துயர் தராதீர்கள். அவர்களுடைய துயரம் உங்களுக்கு நலம் பயக்காது. என்றுமுள்ள உடன்படிக்கையின் இரத்தத்தால், ஆடுகளின் பெரும் ஆயரான நம் ஆண்டவர் இயேசுவை இறந்தோரிடமிருந்து எழுப்பியவர் அமைதியை அருளும் கடவுளே. அவர் தம் திருவுளத்தை நீங்கள் நிறைவேற்றும்படி, எல்லா நன்மையும் செய்வதற்கு உங்களை ஆயத்தப்படுத்தி இயேசு கிறிஸ்து வழியாகத் தமக்கு உகந்ததை நம்மில் செய்தருள்வாராக! இயேசு கிறிஸ்துவுக்கே என்றென்றும் மாட்சி உரித்தாகுக! ஆமென்.

## நற்செய்தி: மாற்கு 6:30-34

அக்காலத்தில்திருத்தூதர்கள் இயேசுவிடம் வந்துகூடித் தாங்கள் செய்தவை, கற்பித்தவையெல்லாம் அவருக்குத் தெரிவித்தார்கள். அவர் அவர்களிடம், நீங்கள் பாலைநிலத்திலுள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்று சற்று ஓய்வெடுங்கள்" என்றார். ஏனெனில் பலர் வருவதும் போவதுமாய் இருந்ததால், உண்பதற்குக்கூட அவர்களுக்கு நேரம் கிடைக்கவில்லை.அவ்வாறே அவர்கள் படகேறிப் பாலைநிலத்தில் உள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்றார்கள்.அவர்கள் புறப்பட்டுப் போவதை மக்கள் பார்த்தார்கள். பலர் அவர்களை இன்னாரென்று தெரிந்து கொண்டு, எல்லா நகர்களிலிருந்தும் கால் நடையாகவே கூட்டமாய் ஓடி, அவர்களுக்குமுன் அங்கு வந்து சேர்ந்தனர்.அவர் கரையில் இறங்கியபோது பெருந்திரளான மக்களைக் கண்டார். அவர்கள் ஆயரில்லா ஆடுகளைப்போல் இருந்ததால் அவர்கள் மீது பரிவு கொண்டு, அவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்தார்.

**தியானம்:** நன்மை செய்யவும் பகிர்ந்து வாழவும் மறவாதீர்கள். இவ்வகைப் பலிகளே கடவுளுக்கு உகந்தவை என்ற கருத்தை இன்றைய முதல் வாசகம் எமக்கு கூறி நிற்கின்றது. இன்றைய சூழலில் நாம் பலவகையான அச்ச உணர்வுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். கொள்ளை நோயின் தாக்கம் குறைவதாக இல்லை. அதி வேகமாக அதிகரித்து செல்கின்றது. பல நாட்களாக வீட்டிலேயே முடங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம். அதனால் மனதளவில் பல பாதிப்புகளை நாம் சந்திக்க வேண்டி உள்ளது. இவ்வாறான சூழலில் நாம் கடவுளை புகழ முடியுமா? ஆனால் நம் உதடுகள் செலுத்தும் காணிக்கை பெரிது என்று முதல் வாசகத்தில் பார்க்கிறோம். நற்செய்தியில் பலமக்கள் யேசுவை தேடி வருகின்றார்கள் அவர்கள் ஆயன் இல்லா ஆடுகள்போல் இருந்ததைப் பார்த்து யேசு அவர்கள்மேல் பரிவு கொள்கின்றார். இன்று நாமும் அவ்வாறான நிலைக்கு தள்ளப் பட்டுள்ளோம். ஆலயங்களுக்கு செல்ல பயமாக இருக்கின்றது. ஒன்றாக கூடி மகிழ முடியவில்லை. மன

பாரங்களை இறக்கி வைக்க முடியவில்லை. ஆனால் தேவையில் இருந்த மக்கள் யேசுவை தேடி சென்றதுபோல் நாமும் செல்வோம். அவர் நிற்சயமாக எம்மேல் பரிவு கொண்டு எம்மை பாதுகாப்பார், எமது தேவைகளையும் சந்திப்பார்.

## பெப்ரவரி – 07 – பொதுக்காலத்தின் 5ம் ஞாயிறு

---

### முதல் வாசகம்: யோபு 7: 1-4, 6-7

மண்ணில் வாழ்வது மனிதருக்குப் போரட்டந்தானே? அவர்களின் நாள்கள் கூலியாள்களின் நாள்களைப் போன்றவைதாமே? நிழலுக்கு ஏங்கும் அடிமை போலவும், கூலிக்குக் காத்திருக்கும் வேலையாள் போலவும், வெறுமையான திங்கள்கள் எனக்கு வாய்த்தன் இன்னல்மிகு இரவுகள் எனக்குப் பங்காயின. படுக்கும்போது எப்போது எழலாம் என்பேன்! இரவோ நீண்டிருக்கும் விடியும்வரை புரண்டு உழல்வேன், புழுவும் புழுதிப்படலமும் போர்த்தின என் உடலை் வெடித்தது என் தோல் வடிந்தது சீழ். என் நாள்கள் தறியின் ஓடுகட்டையினும் விரைந்தோடுகின்றன் அவை நம்பிக்கையின்றி முடிவடைகின்றன. என் உயிர் வெறுங்காற்றே என்பதை நினைவுகூருவீர் என் கண்கள் மீண்டும் நன்மையைக் காணா. என்னைக் காணும் கண் இனி என்னைப் பார்க்காது. என் மேல் உம் கண்கள் இருக்கும் நானோ இரேன். கார்முகில் கலைந்து மறைவதுபோல் பாதாளம் செல்வோர் ஏறி வாரார்.

### இரண்டாம் வாசகம்: 1கொரி 9:16-19, 22-23

நான் நற்செய்தியை அறிவிக்கிறேன் என்றாலும் அதில் நான் பெருமைப்பட ஒன்றுமில்லை. இதைச் செய்ய வேண்டிய கட்டாயம் எனக்கு உள்ளது. நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு! இதை நானாக விரும்பிச் செய்தால் எனக்குக் கைம்மாறு உண்டு. நானாக விரும்பாவிட்டாலும் இது என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பாக இருக்கிறது. அப்படியானால், எனக்குக் கைம்மாறு என்ன? உங்களுக்கு எச்செலவுமின்றி நற்செய்தியை அறிவிப்பதிலுள்ள மனநிறைவே அக்கைம்மாறு நான் நற்செய்தி அறிவிப்போருக்குரிய உரிமையைக் கொஞ்சம் கூடப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. நான் யாருக்கும் அடிமையாய் இல்லாதிருந்தும் பலரைக் கிறிஸ்துவிடம் கொண்டுவர என்னை எல்லாருக்கும் அடிமையாக்கிக் கொண்டேன். வலுவற்றவர்களைக் கிறிஸ்துவிடம் கொண்டுவர வலுவற்றவர்களுக்கு வலுவற்றவனானேன். எப்படியாவது ஒரு சிலரையேனும் மீட்கும்படி நான் எல்லாருக்கும் எல்லாமானேன். நற்செய்தியால் வரும் ஆசியில் பங்கு பெறவேண்டி நற்செய்திக்காக எல்லாவற்றையும் செய்கிறேன்.

### நற்செய்தி: மாற் 1: 29-39

பின்பு அவர்கள் தொழுகைக் கூடத்தை விட்டு வெளியே வந்து யாக்கோபு, யோவானுடன் சீமோன், அந்திரேயா ஆகியோரின் வீட்டிற்குள்



### நற்செய்தி: லூக் 5:27-32

அதன்பின் இயேசு வெளியே சென்று சுங்கச் சாவடியில் அமர்ந்திருந்த லேவி என்னும் பெயருடைய வரி தண்டுபவர் ஒருவரைக் கண்டார் அவரிடம், “என்னைப் பின்பற்றி வா!” என்றார். அவர் அனைத்தையும் விட்டுவிட்டு எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார். இந்த லேவி தம் வீட்டில் அவருக்கு ஒரு பெரியவிருந்து அளித்தார். வரி தண்டுபவர்களும் மற்றவர்களும் பெருந்திரளாய் அவர்களோடு பந்தியில் அமர்ந்தார்கள். பரிசேயர்களும் அவர்களைச் சேர்ந்த மறைநூல் அறிஞர்களும் முணுமுணுத்து இயேசுவின் சீடரிடம், “வரிதண்டுபவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து நீங்கள் உண்பதும் குடிப்பதும் ஏன்?” என்று கேட்டனர். இயேசு அவர்களுக்கு மறுமொழியாக, “நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவர்க்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே மனம் மாற அழைக்க வந்தேன்” என்றார்.

**தியானம்:** பொதுவாக இவ்வுலக மக்கள் செல்வம் சேர்ந்தோரையும், வளமாக வாழ்வோரையும்தான் தமது உறவுகள் என்று சொல்வதில் பெருமை கொள்கின்றது. ஆனால் யேசுவின் போதனை அதுவல்ல. நற்செய்தியில் பார்க்கும் வரி தண்டுபவரான மத்தேயு ஒரு செல்வந்தர். அவர் மக்களிடம் இருந்து வரியைப் பெற்று அதனை ஆள்பவர்களிடம் கொடுத்து, அதற்காக பெரும் பணம் பெறுகின்ற ஒரு செல்வந்தர். ஆனால் மக்களால் அவர் ஏற்றுக் கொள்ளப் படவில்லை. மாறாக பாவி என்று ஒதுக்கப் பட்டார். அந்நாட்களில் மக்கள் வரி செலுத்த விரும்பவில்லை. இன்று நாம் வாங்கும் ஒவ்வொரு பொருளுக்கும், உளைக்கும் ஒவ்வொரு சதத்திற்கும் வரி செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தாவிட்டால் ஒன்றில் அதிக பணம் மேலதிகமாக செலுத்த வேண்டும், அல்லது தண்டனை அனுபவிக்க வேண்டும். நாமும் கஸ்டப் பட்டு உழைக்கும் பணத்தில் வரி கட்ட வேண்டியுள்ளதே என்று கவலைப் படுகின்றோம்தானே!. அப்படியிருக்க அன்றைய மக்கள் அதனை விரும்பாதது ஒன்றும் ஆச்சரியம் இல்லையே!. புறக்கணிக்கப் படுபவர்களைத்தான் தேடி வந்தேன் என்ற கருத்தினை யேசு நற்செய்தியில் ஆணித்தரமாக முன்வைக்க விரும்புகின்றார். முதல் வாசகமும் இதற்கு ஒத்த கருத்தைத்தான் சொல்லி நிற்கின்றது. “பசித்திருப்போருக்காக உன்னையே கையளித்து, வறியோரின் தேவையை நிறைவு செய்வாயானால், இருள் நடுவே உன் ஒளி உதிக்கும் இருண்ட உன் நிலை நண்பகல் போல் ஆகும்” என்னும் கருத்தை முதல் வாசகம் முன்வைக்கின்றது. இன்றைய கால கட்டத்தில் இவை நமக்கு மிகவும் பொருத்தமாகவே உள்ளது. எல்லாம் இருந்தும் வெறுமையை, தனிமையை உணர்பவர்கள் ஏராளம். உறவுகள் இருந்தும் வயோதிப மடங்களில் வாழ்பவர்கள் ஏராளம். இவர்கள் அனைவரும் புறக்கணிக்கப் பட்டவர்கள். அவர்களை தேடி ஆறுதல் சொல்ல எம்மால் முடியுமா? எனவே இத்தவக்காலத்தை வளமைபோல் வந்துபோகும் ஒன்றாக இல்லாமல் மாறுதலான காலமாக மாற்றுவது எம் கையில்தான் உள்ளது.

நற்செய்தியிலும் யோவானின் சீடர்கள் தாமும் பரிசேயரும் நோன்பிருக்க உமது சீடர்கள் ஏன் நோன்பிருப்பதில்லை என்ற கேள்விக்கு தான் அவர்களுடன் இருக்கும் போது அவர்கள் நோன்பிருக்கத் தேவையில்லை மாறாக தான் அவர்களை விட்டு பிரியும் போது அவர்கள் நோன்பு இருப்பார்கள் என்பதை தெளிவுபடுத்துகிறார். எனவே நாங்கள் நோன்பு என்றால் எம்மை ஒறுத்துக் கொள்வது மட்டும் நோன்பு என்று தவறாக கருதாமல் இன்றைய முதல் வாசகத்தில் கூறப்படுவதுபோல் அயலவர்களின் தேவை அறிந்து அவர்களுடன் பகிர்ந்து அன்பு கொண்டு வாழ்வதே உண்மையான நோன்பு என்பதை உணர்ந்தவர்களாக வாழும் பொழுது எமது வாழ்வானது ஒளிமயமானதாக, ஆசீர் நிறைந்ததாக இருக்கும். எனவே நாங்கள் பிறருக்கு உதவிகள் செய்வதன் மூலம் இறைவனுக்கு ஏற்ற உண்மையான நோன்பினை கடைப்பிடித்து வாழ்வோம்.

## பெப்ரவரி – 20 –சனி

### தூய யூக்கோரியுஸ்

-------------------------------------------------------------------

**முதல் வாசகம்: எசா 58:9-14**

அப்போது நீ ஆண்டவரை மன்றாடுவாய் அவர் உனக்குப் பதிலளிப்பார் நீ கூக்குரல் இடுவாய் அவர் “இதோ! நான்” என மறுமொழி தருவார். உன்னிடையே இருக்கும் நுகத்தை அகற்றிவிட்டு, சுட்டிக்காட்டிக் குற்றஞ்சாட்டுவதையும் பொல்லாதன பேசுவதையும் நிறுத்திவிட்டு, பசித்திருப்போருக்காக உன்னையே கையளித்து, வறியோரின் தேவையை நிறைவு செய்வாயானால், இருள் நடுவே உன் ஒளி உதிக்கும் இருண்ட உன் நிலை நண்பகல் போல் ஆகும். ஆண்டவர் தொடர்ந்து உன்னை வழிநடத்துவார் வறண்ட சூழலில் உனக்கு நிறைவளிப்பார் உன் எலும்புகளை வலிமையாக்குவார் நீயும் நீர் பாய்ந்த தோட்டம்போலும், ஒருபோதும் வற்றாத நீரூயஅற்றுபோலும் இருப்பாய். உன் மக்கள் பண்டை நாளிலிருந்து பாழடைந்து கிடப்பவற்றைக் கட்டியெழுப்புவர் தலைமுறை தலைமுறையாக உள்ள அடித்தளங்களின் மேல் கட்டியெழுப்புவாய் தகர்ந்த மதிலைத் திரும்பக் கட்டுபவன் என்றும் குடியிருப்பதற்குத் தெருக்களைச் சீர்படுத்துபவன் என்றும் பெயர் பெறுவாய். ஓய்வுநாளின் முறைமைகளினின்று விலகிச் செல்லாது, என் புனித நாளில் உன் விருப்பம் போல் செய்யாதிருந்து, ஓய்வு நாள் “மகிழ்ச்சியின் நாள்” என்றும் “ஆண்டவரின் மேன்மைமிகு புனித நாள்” எனவும் சொல்லி அதற்கு மதிப்புத் தந்து, உன் சொந்த வழிகளில் செல்லவோ உன் சொந்த ஆதாயத்தை நாடவோ வெற்றுப் பேச்சுகளைப் பேசவோ செய்யாதிருந்தால், அப்பொழுது, ஆண்டவருக்கு ஊழியம் புரியும் மகிழ்ச்சியைப் பெறுவாய் நானோ, மண்ணுலகின் உயர்விடங்களில் உன்னை வலம்வரச் செய்வேன் உன் மூதாதையாகிய யாக்கோபின் உரிமைச் சொத்தின் மூலம் உனக்கு உணவளிப்பேன் ஆண்டவரின் வாய் இதை உரைத்தது.



சென்றார்கள். சீமோனுடைய மாமியார் காய்ச்சலாய்க் கிடந்தார். உடனே அவர்கள் அதைப் பற்றி இயேசுவிடம் சொன்னார்கள். இயேசு அவரருகில் சென்று கையைப் பிடித்து அவரைத் தூக்கினார். காய்ச்சல் அவரை விட்டு நீங்கிற்று. அவர் அவர்களுக்குப் பணிவிடை செய்தார். மாலை வேளையில், கதிரவன் மறையும் நேரத்தில் நோயாளர்கள், பேய்பிடித்தவர்கள் அனைவரையும் மக்கள் அவரிடம் கொண்டுவந்தார்கள். நகர் முழுவதும் வீட்டு வாயில்முன் கூடியிருந்தது. பல்வேறு பிணிகளால் வருந்திய பலரை அவர் குணப்படுத்தினார். பல பேய்களையும் ஓட்டினார் அந்தப் பேய்கள் அவரை அறிந்திருந்ததால் அவற்றை அவர் பேசவிடவில்லை. இயேசு விடியற்காலைக் கருக்கலில் எழுந்து தனிமையான ஓர் இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கே அவர் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார். சீமோனும் அவருடன் இருந்தவர்களும் அவரைத் தேடிச் சென்றார்கள். அவரைக் கண்டதும், “எல்லாரும் உம்மைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்” என்றார்கள். அதற்கு அவர், “நாம் அடுத்த ஊர்களுக்குப் போவோம், வாருங்கள். அங்கும் நான் நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டும் ஏனெனில் இதற்காகவே நான் வந்திருக்கிறேன்” என்று சொன்னார். பின்பு அவர் கலிலேய நாடுமுழுவதும் சென்று அவர்களுடைய தொழுகைக் கூடங்களில் நற்செய்தியைப் பறைசாற்றி பேய்களை ஓட்டி வந்தார்.

**தியானம்:** கடவுளுடைய பராமரிப்பும் இரக்க பெருக்கும் மனித குலத்தின்மேல் என்றென்றும் நிறைவாய் உள்ளதை சுட்டிக் காட்டி, அந்த அன்பிற்கு பரிகாரமாக மனிதர்களாகிய நாம் நம் மத்தியில் பணிவிடைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற அழைப்பை பொதுக்காலத்தின் 5வது ஞாயிறு இறைவார்த்தைப் பகுதிகள் இன்று எமக்கு விடுக்கின்றன. இறைமகன் கிறீஸ்த்து தனது முதல் போதனையில் காலம் நிறைவேறிவிட்டது, இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது, என்று பறை சாற்றினார். இந்த நெருக்கத்தை மனிதர்க்கு உணர்த்தவே அவர்களை நெருங்கி வருகிறார், அவர்களை தொடுகிறார், குணப்படுத்துகிறார், பேய்களை ஓட்டுகிறார். இவற்றின் வெளிப்பாடாகவே இன்றைய நற்செய்தியில் சீமோனின் மாமியாரின் காய்ச்சலை குணப்படுத்தினார். அவரது இரக்கம் எல்லோருக்கும் பொதுவானது என்பதற்கு இது ஒரு அடையாளம். சீமோனின் மாமியார் உடனே எழுந்து பணிவிடை புரிகிறார். அவ்வாறே இன்றைய முதல் வாசகத்தில் உடல் நலம் குன்றியும் இறைவனை இகழாமல் இறைவனுக்கு நன்றி கூறும் யோபுவின் மன நிலையையும் நாம் அங்கு காண்கின்றோம். உடல் நலம் என்பது நாம் பிறருக்கு பணிவிடை புரிவதற்கே! இதுவே இரையரசை நாம் அறிவிக்கும் முறை. ஆகவேதான் நாமும் ஒருவர் மற்றவருக்கு பணிவிடை புரிவோம். இறையரசின் சாட்சிகளாய் வாழ்வோம். இம்மண்ணகத்தில் விண்ணகத்தை நாம் காண்போம்.

# பெப்ரவரி – 08 – திங்கள்

**புனித ஜெரோம் எமிலியானி**

---

## முதல் வாசகம்: தொநூ 1:1-19

தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும், மண்ணுலகையும் படைத்தபொழுது, மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரளின்மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது. அப்பொழுது கடவுள், "ஒளி தோன்றுக!" என்றார் ஒளி தோன்றிற்று. கடவுள் ஒளி நல்லது என்று கண்டார். கடவுள் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரித்தார். கடவுள் ஒளிக்குப் பகல் என்றும் இருளுக்கு இரவு என்றும் பெயரிட்டார். மாலையும் காலையும் நிறைவுற்று முதல் நாள் முடிந்தது. அப்பொழுது கடவுள், "நீர்த்திரளுக்கு இடையில், வானம் தோன்றுக! அது நீரினின்று நீரைப் பிரிக்கட்டும்" என்றார். கடவுள் வானத்தை உருவாக்கி வானத்திற்குக் கீழுள்ள நீரையும் வானத்திற்கு மேலுள்ள நீரையும் பிரித்தார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் வானத்திற்கு "விண்ணுலகம் என்று பெயரிட்டார். மாலையும் காலையும் நிறைவுற்று இரண்டாம் நாள் முடிந்தது. அப்பொழுது கடவுள், "விண்ணுலகுக்குக் கீழுள்ள நீர் எல்லாம் ஓரிடத்தில் ஒன்றுசேர உலர்ந்த தரை தோன்றுக!" என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் உலர்ந்த தரைக்கு நிலம் என்றும் ஒன்றுதிரண்ட நீருக்குக் கடல் என்றும் பெயரிட்டார். கடவுள் அது நல்லது என்று கண்டார். அப்பொழுது கடவுள், "புற்பூண்டுகளையும் விதை தரும் செடிகளையும், கனி தரும் பழமரங்களையும் அந்த அந்த இனத்தின்படியே நிலம் விளைவிக்கட்டும்" என்றார். அது அவ்வாறே ஆயிற்று. புற்பூண்டுகளையும் விதையைப் பிறப்பிக்கும் செடிகளையும் கனிதரும் மரங்களையும் அந்த அந்த இனத்தின்படி நிலம் விளைவித்தது. கடவுள் அது நல்லது என்று கண்டார். மாலையும், காலையும் நிறைவுற்று மூன்றாம் நாள் முடிந்தது. அப்பொழுது கடவுள், "பகலையும் இரவையும் வெவ்வேறாகப் பிரிப்பதற்கும் காலங்கள், நாள்கள், ஆண்டுகள் ஆகியவற்றைக் குறிப்பதற்கும் விண்விரிவினில் ஒளிப்பிழம்புகள் தோன்றுக! அவை மண்ணுலகிற்குஒளிதர விண்விரிவினில் ஒளிப்பிழம்புகளாக இருக்கட்டும்" என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் இருபெரும் ஒளிப்பிழம்புகளை உருவாக்கினார். பகலை ஆள்வதற்குப் பெரிய ஒளிப்பிழம்பையும், இரவை ஆள்வதற்குச் சிறிய ஒளிப்பிழம்பையும் மற்றும் விண்மீன்களையும் அவர் உருவாக்கினார். கடவுள் மண்ணுலகிற்கு ஒளிதர விண்ணுலக வானத்தில் அவற்றை அமைத்தார். பகலையும் இரவையும் ஆள்வதற்கும் ஒளியையும் இருளையும் வெவ்வேறாகப் பிரிப்பதற்கும் அவற்றை அமைத்தார். கடவுள் அது நல்லது என்று கண்டார். மாலையும் காலையும் நிறைவுற்று நான்காம் நாள் முடிந்தது.



தன்னை ஒடுக்கிக்கொள்ளும் நாளையா நான் உண்ணாநோன்பின் நாளாகத் தெரிந்து கொள்வது? ஒருவன் நாணலைப் போல் தன் தலையைத் தாழ்த்திச் சாக்கு உடையையும் சாம்பலையையும் அணிந்து கொள்வதா எனக்கு ஏற்ற நோன்பு? இதையா நீங்கள் நோன்பு என்றும் ஆண்டவருக்கு உகந்த நாள் என்றும் அழைக்கின்றீர்கள்? கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும், நுகத்தின் பிணையல்களை அறுப்பதும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும், எவ்வகை நுகத்தையும் உடைப்பதும் அன்றோ நான் தேர்ந்துகொள்ளும் நோன்பு! பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும் தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக் கொடுப்பதும் உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு! அப்பொழுது உன் ஒளி விடியல் போல் எழும் விரைவில் உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும் உன் நேர்மை உனக்கு முன் செல்லும் ஆண்டவரின் மாட்சி உனக்குப் பின்சென்று காக்கும். அப்போது நீ ஆண்டவரை மன்றாடுவாய் அவர் உனக்குப் பதிலளிப்பார் நீ கூக்குரல் இடுவாய் அவர் "இதோ! நான்" என மறுமொழி தருவார். உன்னிடையே இருக்கும் நுகத்தை அகற்றிவிட்டு, சுட்டிக்காட்டிக் குற்றஞ்சாட்டுவதையும் பொல்லாதன பேசுவதையும் நிறுத்திவிட்டு, பசித்திருப்போருக்காக உன்னையே கையளித்து, வறியோரின் தேவையை நிறைவு செய்வாயானால், இருள் நடுவே உன் ஒளி உதிக்கும் இருண்ட உன் நிலை நண்பகல் போல் ஆகும்.

## நற்செய்தி: மத் 9:14-15

பின்பு யோவானின் சீடர் இயேசுவிடம் வந்து, "நாங்களும் பரிசேயரும் அதிகமாக நோன்பு இருக்க, உம்முடைய சீடர்கள் ஏன் நோன்பு இருப்பதில்லை?" என்றனர். அதற்கு இயேசு அவர்களை நோக்கி, "மணமகன் தங்களோடு இருக்கும்வரை மணவிருந்தினர்கள் துக்கம் கொண்டாட முடியுமா? மணமகன் அவர்களை விட்டுப் பிரியவேண்டிய காலம் வரும். அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள்.

**தியானம்:** இன்றைய வாசகங்களில் பார்பது போன்று நோன்பானது எவ்வாறு கடைப்பிடிக்க வேண்டும்? ஏன் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை நாங்கள் சிந்தித்து செயற்பட வேண்டுமென்று கூறுகின்றது. நாங்கள் நோன்பு இருக்கின்றோம் என்பதை, நான் மரக்கறி சாப்பிடுகிறேன் என்றும். ஒருநேரம் சாப்பிடுவதில்லை என்றும். மச்சம் சாப்பிடுவதில்லை என்று, மக்கள் பார்க்க வேண்டுமென்று வெளிவேடமாக மற்றவர்களுக்குடன் பேசிக்கொள்கின்றோம். ஆனால் இறைவன் இவ்வாறான நோன்பை அவர் விரும்பவில்லை மாறாக அவர் அன்பு, பகிர்வு இவ்வாறு அயலவர்களுக்கு செய்யும் ஒவ்வொன்றுமே உயர்ந்த நோன்பு என்பதை (எபி. 58:8)ல் கூறுகிறார். "பசித்தோர்க்கு……………….நான் விரும்பும் நோன்பு." இன்றைய

உலகம் முழுவதையும் தமதாக்கிக் கொண்டாலும் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?

**தியானம்:** நேற்றய நாளில் நாம் தவக்காலத்தை ஆரப்பித்தோம், கொள்ளை நோயின் தாக்கத்தால் ஏற்பட்ட முடக்கநிலை ஆரம்பித்து கிட்டத்தட்ட 1 வருடம் ஆகின்றது. எந்த மாற்றமும் இடம் பெறுவதாக இல்லை. என்ன நடக்குமோ என்ற அச்ச உணர்வுடன் நாம் வாழ்கின்றோம். அதிகமான மக்கள் இது கடவுள் நமக்கு தந்த ஒரு-வகை தண்டனை என்றே நினைக்கின்றார்கள். கடவுள் படைத்த உலகம் மாசுபட்டு காணப்படுகின்றது. இயற்கையின் சூழல் மாறுபடுகின்றது. இதனால் இயற்கை அழிவுகள் அதிகம் இடம் பெறுகின்றன. இதன் தாக்கமாகக் கூட இவை இருக்கலாம் என்ற உணர்வும் உண்டு. எது எவ்வாறு இருப்பினும் நாம் கடவுள் தந்த மனமாற்றத்தின் காலமாக இதனை நினைப்போம். முதல் வாசகத்தில் "வாழ்வையும் நன்மையையும், சாவையும் தீமையையும் இன்று நான் உனக்கு முன்பாக வைத்துள்ளேன்". என்று கூறப்பட்டுள்ளது. இதில் நாம் எதனை தேர்வு செய்கின்றோம்.நாம் தெரிவு செய்யும் பாதையில்தான் எமது வாழ்வு அடங்கியுள்ளது. எமது உள்ளம் கடவுளின் குரலுக்கு செவி கொடுக்காமல், அவரை விட்டு விலகி சென்றால் எமக்கு கிடைப்பது சாபமே!. எனவே சாபத்தை அல்ல ஆசீர் வாதத்தை பெற்ற மக்களாக வாழ இத்தவக்காலம் நமக்கு துணை புரிவதாக!

## பெப்ரவரி – 19 – தவக்காலத்தின் 1ம் வெள்ளி

**தூய கோன்ராடு**

---

### முதல் வாசகம்: எசா 58:1-9

பேரொலி எழுப்பிக் கூப்பிடு, நிறுத்திவிடாதே் எக்காளம் முழங்குவது போல் உன் குரலை உயர்த்து என் மக்களுக்கு அவர்களின் வன்செயல்களையும், யாக்கோபின் குடும்பத்தாருக்கு அவர்களின் பாவத்தையும் எடுத்துக்கூறு. அவர்கள், நேர்மையானவற்றைச் செய்யும் மக்களினம்போலும், தங்கள் கடவுளின் கட்டளையைக் கடைப்பிடிப்போர் போலும் நாள்தோறும் என்னைத் தேடுகின்றார்கள் என் நெறிமுறைகள் பற்றிய அறிவை நாடுகின்றார்கள் நேர்மையான நீதித்தீர்ப்புகளை என்னிடம் வேண்டுகின்றார்கள் கடவுளை அணுகிவர விழைகின்றார்கள்."நாங்கள் உண்ணா நோன்பிருந்த பொழுது, நீர் எங்களை நோக்காதது ஏன்? நாங்கள் எங்களைத் தாழ்த்திக் கொண்டபோது நீர் எங்களைக் கவனியாதது ஏன்? என்கிறார்கள். நீங்கள் நோன்பிருக்கும் நாளில் உங்கள் ஆதாயத்தையே நாடுகின்றீர்கள் உங்கள் வேலையாள்கள் அனைவரையும் ஒடுக்குகின்றீர்கள். இதோ, வழக்காடவும், வீண்சண்டையிடவும், கொடும் கையால் தாக்கவுமே நீங்கள் நோன்பிருக்கிறீர்கள்! இன்றுபோல் நீங்கள் உண்ணா நோன்பிருந்தால் உங்கள் குரல் உன்னதத்தில் கேட்கப்படாது. ஒருவன்



### நற்செய்தி: மாற்கு 6:53-56

அக்காலத்தில் இயேசுவும் சீடர்களும் மறு கரைக்குச் சென்று கெனசரேத்துப் பகுதியை அடைந்து படகைக்கட்டி நிறுத்தினார்கள். அவர்கள் படகைவிட்டு இறங்கிய உடனே, மக்கள் இயேசுவை இன்னார் என்று கண்டுணர்ந்து, அச்சுற்றுப் பகுதி எங்கும் ஓடிச் சென்று, அவர் இருப்பதாகக் கேள்விப்பட்ட இடங்களுக்கெல்லாம் நோயாளர் களைப் படுக்கையில் கொண்டு வரத் தொடங்கினார்கள்.

**தியானம்:** அன்பார்ந்தவர்களே, இன்றைய நாள் ஆண்டவரின் இரக்கத்தை நாம் பெற்றுக்கொள்ளுகிற நாள். இன்றைய நற்செய்தி வாசகத்திலே இயேசு கெனசரேத் பகுதிக்கு சென்றவுடன், பெருந்திரளான கூட்டம் தேடி வந்தது. அவரைத்தொட்ட யாவரும் நலமடைந்தார்கள். ஆனால் நம்முடைய வாழ்க்கையில் இது வித்தியாசமாய் மாறுகிறது, வித்தியாசமாய நடக்கிறது. அது என்ன நாம் இயேசுவைத் தொடுவது இல்லை, ஆனால் இயேசு நம்மைத் தொடுகிறார் .நற்கருணை வழியாக அவர் நமக்குள்ளாய் வருகிறார். நம்மைத் தொடுகிறார், இறைவார்த்தை வழியாக அவர் நமக்குள்ளாய் வருகிறார், நம்மைத் தொடுகிறார். ஆலயத்திற்கு செல்வதன் மூலமாக, தனிசெபத்தின் மூலமாக, குடும்ப செபத்தின் மூலமாக, ஆண்டவர் நம்மைத்தேடி வருகிறார். நம்மைத் தொடுகிறார். நாம் நலமடைகிறோமா? நாம் குணமடைகிறோமா? சிந்தித்து பார்ப்போம். நம்முடைய வாழ்வு, நம்முடைய குடும்பம் குணமடைய வேண்டும் நலமடைய வேண்டும், பெலமடைய வேண்டும் என்று இன்றைய நாளிலே விசேசமாக செபிப்போம். ஆண்டவருடைய இரக்கம் நம்மை நம் வாழ்வை, நம் குடும்பத்தை புதிய படைப்பாய், புதிய ஆற்றலாய், புதிய ஆசீர்வாதமாய், மாற்ற வேண்டும் என்று புதிய இரக்கத்திற்குள்ளாய் வழிநடத்த வேண்டுமென்று புதிய அன்பிற்குள்ளாய் செயல்படுத்த வேண்டுமென்று இன்றைய நாளில் விசேசமாக செபிப்போம். ஆண்டவர் எல்லா விதமான ஆற்றலாலும் எல்லா விதமான ஆசீர்வாதத்தாலும் அவருடைய தெய்வீக தொடுதலாலும் எம்மைத் தொட வேண்டும் என்று மன்றாடுவோம்.

## பெப்ரவரி – 09 – செவ்வாய்

**ஆண்டவரின் திருமுகம்**

---

### முதல் வாசகம்: தொநூ 1: 20-2:4

அப்பொழுது கடவுள், "திரளான உயிரினங்களைத் தண்ணீர் தோற்றுவிப்பதாக! விண்ணுலக வானத்தில் நிலத்திற்கு மேலே பறவைகள் பறப்பனவாக!" என்றார். இவ்வாறு, கடலின் பெரும்

பாம்புகளையும், திரள் திரளாக நீரில் நீந்திவாழும் உயிரினங்களையும், இறக்கையுள்ள எல்லாவிதப் பறவைகளையும் அவ்வவற்றின் இனத்தின்படி கடவுள் படைத்தார். கடவுள் அது நல்லது என்று கண்டார். கடவுள் அவற்றிற்கு ஆசி வழங்கி "பலுகிப் பெருகிக் கடல் நீரை நிரப்புங்கள். பறவைகளும் மண்ணுலகில் பெருகட்டும்" என்றுரைத்தார். மாலையும் காலையும் நிறைவுற்று, ஐந்தாம் நாள் முடிந்தது. அப்பொழுது கடவுள், "கால்நடைகள், ஊர்வன, காட்டுவிலங்குகள் ஆகியவற்றை அவ்வவற்றின் இனத்தின்படி நிலம் தோற்றுவிப்பதாக" என்றார். கடவுள் காட்டு விலங்குகளையும் கால்நடைகளையும் நிலத்தில் ஊர்வன யாவற்றையும் அவ்வவற்றின் இனத்தின்படி உருவாக்கினார். கடவுள் அது நல்லது என்று கண்டார். அப்பொழுது கடவுள், "மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், கால்நடைகளையும், மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்" என்றார். கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார் கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள் கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்" என்றார். விண்ணுலகும் மண்ணுலகும் அவற்றில் உள்ள அமைப்புகள் அனைத்தும் உருவாக்கப் பெற்று நிறைவெய்தின. மேலும் கடவுள் தாம் செய்த வேலையை ஏழாம் நாளில் முடித்திருந்தார். அவர் தாம் செய்த வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச்செய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். கடவுள் ஏழாம் நாளுக்கு ஆசி வழங்கி, அதைப் புனிதப்படுத்தினார். ஏனெனில் கடவுள் நாம் செய்த படைப்பு வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச் செய்து அந்நாளில்தான் ஓய்ந்திருந்தார். இவையே விண்ணுலக, மண்ணுலகப் படைப்பின் தோற்ற முறைமையாம். ஆண்டவராகிய கடவுள் மண்ணுலகையும், விண்ணுலகையும் உருவாக்கிய பொழுது, மண்ணுலகில் நிலவெளியின் எவ்விதப் புதரும் தோன்றியிருக்கவில்லை வயல்வெளியின் எவ்விதச் செடியும் முளைத்திருக்கவில்லை ஏனெனில் ஆண்டவராகிய கடவுள் மண்ணுலகின்மேல் இன்னும் மழை பெய்விக்கவில்லை மண்ணைப் பண்படுத்த மானிடர் எவரும் இருக்கவில்லை. அப்பொழுது கடவுள், "மண்ணுலகெங்கும் உள்ள விதை தரும் செடிகள், பழமரங்கள், அனைத்தையும் உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன் இவை உங்களுக்கு உணவாகட்டும். எல்லாக் காட்டுவிலங்குகள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்வன ஆகிய அனைத்து உயிரினங்களுக்கும் பசுமையான செடிகள் அனைத்தையும் நான் உணவாகத் தந்துள்ளேன்" என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன. மாலையும் காலையும் நிறைவுற்று ஆறாம் நாள் முடிந்தது.



பேரன்பையும், இரக்கத்தையும் நம்மீது பொழிந்து கொண்டிருக்கின்றார். அதுபோல இயேசுவும் ஓய்வின்றி உழைத்தார். ஓய்வுநாளிலும் நோயாளர்களைக் குணமாக்கினார், பாவிகளை மன்னித்தார், நன்மை செய்வதற்கு ஏது ஓய்வு? என வாழ்ந்துகாட்டினார். இயேசு ஆண்டவரைப் பின்பற்றி நடக்கின்ற நாங்களும் இரக்கமுள்ளவர்களாகவும், மற்றவர்களில் பரிவு காட்டுபவர்களாகவும், மற்றவர்களை அன்பு செய்து வாழ்பவர்களாகவும் வாழ்ந்திட அருள் வேண்டிடுவோம் ஆமென்.

## பெப்ரவரி – 18 –வியாழன்

**புனித பேனடேற்**

---

### முதல் வாசகம்: இச 30:15-20

இதோ பார், வாழ்வையும் நன்மையையும், சாவையும் தீமையையும் இன்று நான் உனக்கு முன்பாக வைத்துள்ளேன். அது இதுதான் இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். உன் கடவுளாகிய ஆண்டவர்மீது அன்பு பாராட்டு. அவரைப் பின்பற்றி அவரது வழியில் நட. அவரது கட்டளைகளையும், நியமங்களையும், முறைமைகளையும் கடைப்பிடி. அப்போது நீ வாழ்வாய், நீ பலுகுவாய். நீ உடைமையாகக் கொள்ளப்போகும் நாட்டில் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு ஆசிவழங்குவார். ஆனால், உனது உள்ளம் விலகிச் சென்று, நீ செவிகொடாமல் கெட்டலைந்து, வேறு தெய்வங்களை வணங்கி, அவற்றுக்குப் பணிவிடை புரிந்தால், இன்று நான் உனக்கு அறிக்கையிட்டுக் கூறுகிறேன். நீ நிச்சயம் அழிந்துபோவாய். நீ உரிமையாக்கிக் கொள்ளுமாறு, யோர்தானைக் கடந்து சென்றடையும் பூமியில் உன் வாழ்நாள் நீடித்திருக்காது. உன் மேல் இன்று நான் விண்ணையும் மண்ணையும் சான்றாக அழைத்து, வாழ்வையும் சாவையும், ஆசியையும் சாபத்தையும் உனக்கு முன் வைக்கிறேன். நீயும் உனது வழித்தோன்றல்களும் வாழும் பொருட்டு வாழ்வைத் தேர்ந்துகொள். கடவுளாகிய ஆண்டவர்மீது அன்பு பாராட்டு அவரது குரலுக்குச் செவிகொடு அவரையே பற்றிக் கொள். ஏனெனில், அவரே உனது வாழ்வு அவரே உன் நீடிய வாழ்வு. அதனால், ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபு என்னும் உன் மூதாதையருக்குக் கொடுப்பதாக ஆண்டவர் ஆணையிட்டுக் கூறிய நாட்டில் நீ குடியேறுவாய்.

### நற்செய்தி: லூக் 9:22-25

மேலும் இயேசு, "மானிட மகன் பலவாறு துன்பப்படவும் மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர் ஆகியோரால் உதறித் தள்ளப்பட்டுக் கொலைசெய்யப்படவும் மூன்றாம் நாளில் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும்" என்று சொன்னார். பின்பு அவர் அனைவரையும் நோக்கி, "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை நாள்தோறும் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும். ஏனெனில், தம் உயிரைக் காத்துக் கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்துவிடுவார். என்பொருட்டுத் தம் உயிரை இழக்கும் எவரும் அதைக் காத்துக்கொள்வார். ஒருவர்

உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார். நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது வெளி வேடக்காரரைப் போல் இருக்க வேண்டாம். அவர்கள் தொழுகைக்கூடங்களிலும் வீதியோரங்களிலும் நின்றுகொண்டு மக்கள் பார்க்க வேண்டுமென இறைவேண்டல் செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்று விட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். ஆனால் நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக் கொண்டு, மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார். மேலும் நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்கவேண்டுமென்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் நோன்பு இருக்கும்போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து, முகத்தைக் கழுவுங்கள். அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது மாறாக. மறைவாய் இருக்கிற உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார்

**தியானம்:** யோவான் நற்செய்தியில் இறையியல் சற்று ஆழமாக இருக்கின்றது. காரணம் யோவான் இயேசுவின் வார்த்தைகளை மட்டும் எழுதவில்லை, அந்த வார்த்தைகளை தான் புரிந்துகொண்ட வித்தில் எழுதியிருக்கின்றார். அந்த புரிதல் என்பது மேலோட்டமான அறிவின் மூலமாக வந்ததில்லை, மாறாக ஆழ்நத சிந்தனையின் மூலமாக இயேசுவின் வார்த்தைகளை மீண்டும் மீண்டுமாக அவர் தியானித்தது மூலமாக வந்தது. இயேசுவோடு வாழ்ந்த யோவானுக்கு அவரோடு இருந்தபோது இயேசுவின் போதனைகள் அவ்வளவாக அவருக்கு விளங்கியிருக்கவில்லை. ஆனால் இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பிறகு அவருடைய வார்த்தைகளை தனது வாழ்வின் அனுபவத்தோடு பொருத்திப்பார்த்தபோது அதில் இருந்த உண்மையை அவர் கண்டுகொண்டார். இன்றைய நற்செய்தயில் இயேசு தன்னை இறைதந்தையோடு இணைத்துப்பேசுகின்றார் என்பதை இயேசுவின் வார்த்தைகளில் இருந்து அறிந்து கொள்ளலாம். ஏனென்றால் இயேசுவின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் தந்தையின் வார்த்தைகள், அவருடைய உணர்வுகள் கடவுளின் உணர்வுகளாயிருந்தன, இயேசுவின் ஒவ்வொரு செயல்பாடுகளும் கடவுளின் செயல்பாடுகளாயிருந்தன. பாவத்திற்கு எதிராக இயேசு எவ்வாறு செயல்படுகின்றார் என்பதை இயேசுவின் வாழ்விலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். ஓவ்வொரு மனிதர்களையும் கடவுள் எப்படி பார்க்கின்றார் என்பதையும் இயேசுவின் வார்த்தைகள் மூலமாக நாம் அறிந்துகொள்ளமுடிகின்றது. அவர் ஓய்வுநாள் சட்டத்தை மீறியபோது, “என் தந்தை இன்றும் செயலாற்றுகின்றார், நானும் செயலாற்றுகின்றேன்” என்று கூறினார். வானகத்தந்தைக்கு ஓய்வு தேவையில்லை, அவர் ஓய்வின்றி உழைத்தார் தமது



## நற்செய்தி: மாற்கு 7: 1-13

அக்காலத்தில் ஒருநாள் பரிசேயரும் எருசலேமிலிருந்து வந்திருந்த மறைநூல் அறிஞர் சிலரும் அவரிடம் வந்து கூடினர்.அவருடைய சீடருள் சிலர் தீட்டான, அதாவது, கழுவாத கைகளால் உண்பதை அவர்கள் கண்டார்கள்.பரிசேயரும், ஏன் யூதர் அனைவருமே, தம் மூதாதையர் மரபைப் பின்பற்றிக் கைகளை முறைப்படி கழுவாமல் உண்பதில்லை சந்தையிலிருந்து வாங்கியவற்றைக் கழுவிய பின்னரே உண்பர். அவ்வாறே கிண்ணங்கள், பரணிகள், செம்புகள் ஆகியவற்றைக் கழுவுதல் போன்று அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய மரபுகள் இன்னும் பல இருந்தன. ஆகவே பரிசேயரும் மறைநூல் அறிஞரும் அவரை நோக்கி, ”உம் சீடர் மூதாதையர் மரபுப்படி நடவாமல் தீட்டான கைகளால் உணவு அருந்துவதேன்?” என்று கேட்டனர். அதற்கு அவர், ”வெளிவேடக்காரர்களாகிய உங்களைப்பற்றி எசாயா பொருத்தமாக இறைவாக்கு உரைத்திருக்கிறார். ”இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர் இவர்கள் உள்ளமோ என்னை விட்டு வெகு தொலையில் இருக்கிறது.மனிதக் கட்டளைகளைக் கோட்பாடுகளாகக் கற்பிக்கின்றனர். இவர்கள் என்னை வழிபடுவது வீண்” என்று அவர் எழுதியுள்ளார்.நீங்கள் கடவுளின் கட்டளைகளைக் கைவிட்டு மனித மரபைப் பின்பற்றி வருகிறவர்கள்” என்று அவர்களிடம் கூறினார்.மேலும் அவர், ”உங்கள் மரபை நிலைநாட்டக் கடவுளின் கட்டளைகளை வெகு திறமையாகப் புறக்கணித்து விட்டீர்கள். ”உன் தந்தையையும் தாயையும் மதித்துநட” என்றும் தந்தையையோ தாயையோ சபிப்போர் கொல்லப்பட வேண்டும்” என்றும் மோசே உரைத்திருக்கிறார் அல்லவா!ஆனால் ஒருவர் தம் தாயையோ தந்தையையோ பார்த்து, ”நான் உமக்குத் தரக் கடமைப்பட்டிருக்கிறது ”கொர்பான்” ஆயிற்று அதாவது கடவுளுக்குக் காணிக்கையாயிற்று” என்றால், அதன்பின் அவர் தம் தாய் தந்தைக்கு எந்த உதவியும் செய்ய நீங்கள் அனுமதிப்பதில்லை.இவ்வாறு நீங்கள் பெற்றுக் கொண்ட மரபின் பொருட்டுக் கடவுளின் வார்த்தையைப் பயனற்றதாக்கி விடுகிறீர்கள். இதுபோல நீங்கள் பலவற்றைச் செய்கிறீர்கள்” என்று அவர்களிடம் கூறினார்.

**தியானம்:** தொடக்கத்திலிருந்தே கடவுள் தாம் தேர்ந்து கொண்டவர்கள் வழியாக தம்மை வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல் கால சூழ்நிலைகள், மக்களின் மனநிலைகளுக்கு ஏற்றவாறு அவர்கள் தமக்குகந்த பிள்ளைகளாக வாழ தம் மக்களுக்குப் பல சட்டதிட்டங்களையும் கொடுத்து அவர்களை வழிநடாத்தி வந்தார். காலப்போக்கில் அவர்கள் வெறும் சட்டதிட்டங்களை மட்டும் கடைப்பிடிப்பதிலும், அதை மற்றவர்கள் கடைப்பிடிப்பதைக் கட்டாயப்படுத்துவதிலும் மட்டும் கவனம் செலுத்தி வந்தார்கள். அவற்றை ஒரு மரபாகக் கடைப்பிடிப்பதில் காட்டிய அக்கறையும், ஆர்வமும் அம்மரபுகளின் அடிப்படை நோக்கமான அன்பையும், அந்த அன்பின் ஊற்றாகிய ஆண்டவரையும் அறிந்து கொள்வதில் காட்டிக்கொள்ளவில்லை. இந் நிலையில்தான் அந்த அன்பே மனுவுருதரித்து தம் மக்களிடையே நின்றது. நம் உடலைவிட உள்ளமும், நம் மரபுகளைவிட மனித நேயமும், வழிபாடுகளைவிட

வாழ்க்கை முறையும் உயர்ந்தவை என்பதையே இன்றைய இறைவார்த்தைகள் வாயிலாக இறைமகன் நமக்கு உணர்த்த விரும்புகின்றார். கடவுள் மனிதனுக்காகப் படைத்த எல்லாப் படைப்புகளின் பொழுதும், அவை நல்லவை என்று கண்டார். ஏனெலில் இறுதிவரை அவையனைத்தும் தமக்குக் கீழ்ப்படிந்திருக்கச் செய்திருக்கிறார். மனிதனை மட்டும் மாண்புடன் படைத்து அவன் நல்லவனா? கெட்டவனா? எனக்காணக் காத்திருக்கிறார். அந்த சுதந்திரத்தை அவர் அவனிடமே ஒப்படைத்திருக்கிறார். நாமும் நம் மூ தாதையரிடமிருந்து பல மரபுகளைக் கற்றுக்கொண்டிருக்கிறோம். அவற்றில் பலவற்றை இன்றுவரை நாம் கடைப்பிடித்து வருகின்றோம். நம் வருங்காலச் சந்ததியினரும் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என விருப்புகின்றோம். அவற்றில் கடவுளுக்கு ஏற்காத சாதி, இன, மத வெறிகளும் அடங்கியிருப்பின் அவற்றை இன்றே விலக்கிடுவோம். நம்மைப் படைத்த இறைவன் நம்மை நல்லதெனக் காணும்படி வாழ்ந்திடுவோம்.

## பெப்ரவரி – 10 – புதன்

**தூய ஸ்கொலாஸ்திக்கா**

----------------------------------------------------------------

### முதல் வாசகம்: தொநூா 2:4-9,15-17

இவையே விண்ணுலக, மண்ணுலகப் படைப்பின் தோற்ற முறைமையாம். ஆண்டவராகிய கடவுள் மண்ணுலகையும், விண்ணுலகையும் உருவாக்கிய பொழுது, மண்ணுலகில் நிலவெளியின் எவ்விதப் புதரும் தோன்றியிருக்கவில்லை வயல்வெளியின் எவ்விதச் செடியும் முளைத்திருக்கவில்லை ஏனெனில் ஆண்டவராகிய கடவுள் மண்ணுலகின்மேல் இன்னும் மழை பெய்விக்கவில்லை மண்ணைப் பண்படுத்த மானிடர் எவரும் இருக்கவில்லை. ஆனால் நிலத்திலிருந்து மூடுபனி எழும்பி நிலம் முழுவதையும் நனைத்தது. அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான். ஆண்டவராகிய கடவுள் கிழக்கே இருந்த ஏதேனில் ஒரு தோட்டம் அமைத்துத் தாம் உருவாக்கிய மனிதனை அங்கே வைத்தார். ஆண்டவராகிய கடவுள் கண்ணுக்கு அழகானதும் உண்பதற்குச் சுவையானதுமான எல்லா வகை மரங்களையும், தோட்டத்தின் நடுவில் வாழ்வின் மரத்தையும் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்தையும் மண்ணிலிருந்து வளரச் செய்தார். ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் ஆண்டவராகிய கடவுள் மனிதனை அங்கு கொண்டுவந்து குடியிருக்கச் செய்தார். ஆண்டவராகிய கடவுள் மனிதனிடம், “தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விருப்பம் போல் நீ உண்ணலாம். ஆனால் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து மட்டும் உண்ணாதே ஏனெனில் அதிலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய்” என்று கட்டளையிட்டுச் சொன்னார்.



ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்.' அவர் அருள் நிறைந்தவர், இரக்கம் மிக்கவர் நீடிய பொறுமையுள்ளவர், பேரன்புமிக்கவர் செய்யக் கருதிய தீங்கைக் குறித்து மனம் மாறுகின்றவர். ஒருவேளை அவர் தம் மனத்தை மாற்றிக்கொண்டு, உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு தானியப் படையலையும் நீர்மப் படையலையும் நீங்கள் அளிக்குமாறு உங்களுக்கு ஆசி வழங்குவார். இதை யார் அறிவார்? சீயோனில் எக்காளம் ஊதி எச்சரியுங்கள் புனிதமான உண்ணா நோன்புக்கென நாள் குறியுங்கள் வழிபாட்டுப் பேரணியைத் திரட்டுங்கள். மக்களைத் திரண்டு வரச்செய்யுங்கள் புனித கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள் முதியோரைக் கூடிவரச் செய்யுங்கள், பிள்ளைகளையும் பால் குடிக்கும் குழந்தைகளையும் ஒருசேரக் கூட்டுங்கள் மணமகன் தன் அறையை விட்டு வெளியேறட்டும் மணமகள் தன் மஞ்சத்தைவிட்டுப் புறப்படட்டும். ஆண்டவரின் ஊழியர்களாகிய குருக்கள் கோவில் மண்டபத்திற்கும் பலிபீடத்திற்கும் இடையே நின்று அழுதவண்ணம்,ஆண்டவரே, உம் மக்கள்மீது இரக்கம் கொள்ளும் உமது உரிமைச்சொத்தை வேற்றினத்தார் நடுவில் நிந்தைக்கும் பழிச்சொல்லுக்கும் ஆளாக்காதீர் எனச் சொல்வார்களாக! அவர்களுடைய கடவுள் எங்கே? என வேற்றினத்தார் கூறவும் வேண்டுமோ? அப்பொழுது ஆண்டவர் தம் நாட்டின்மேல் பேரார்வம் கொண்டு தம் மக்கள் மீது கருணை காட்டினார்.

### இரண்டாம் வாசகம்: 2கொரி 5:20...6:2

எனவே நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாய் இருக்கிறோம். கடவுளே எங்கள் வாயிலாக வேண்டுகோள் விடுக்கிறார். ஆகவே கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் மன்றாடுகிறோம். நாம் கிறிஸ்து வழியாகத் தமக்கு ஏற்புடையவராகுமாறு கடவுள் பாவம் அறியாத அவரைப் பாவநிலை ஏற்கச் செய்தார். நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட அருளை வீணாக்க வேண்டாம் என அவரோடு இணைந்து உழைக்கும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். “தகுந்த வேளையில் நான் உமக்குப் பதிலளித்தேன் விடுதலை நாளில் உமக்குத் துணையாய் இருந்தேன்” எனக் கடவுள் கூறுகிறார். இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்!

### நற்செய்தி: மத் 6:1-6,16-18

மக்கள் பார்க்க வேண்டுமென்று அவர்கள்முன் உங்கள் அறச் செயல்களைச் செய்யாதீர்கள். இதைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். இல்லையென்றால் உங்கள் விண்ணகத் தந்தையிடமிருந்து உங்களுக்குக் கைம்மாறு கிடைக்காது. நீங்கள் தர்மம் செய்யும்போது உங்களைப்பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள். வெளிவேடக்காரர், மக்கள் புகழ வேண்டுமென்று தொழுகைக் கூடங்களிலும் சந்துகளிலும் நின்று அவ்வாறு செய்வர். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் தர்மம் செய்யும்போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும். அப்பொழுது நீங்கள் செய்யும் தர்மம் மறைவாயிருக்கும் மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும்

அப்பங்களை நான் நாலாயிரம் பேருக்குப் பிட்டு அளித்தபோது மீதித் துண்டுகளை எத்தனை கூடைகள் நிறைய எடுத்தீர்கள்?” என்று கேட்க, அவர்கள், “ஏழு” என்றார்கள். மேலும் அவர் அவர்களை நோக்கி, “இன்னும் உங்களுக்குப் புரியவில்லையா?” என்று கேட்டார்.

**தியானம்:** அக்காலத்தில் மக்களைத் திசை திருப்பி தாம் சொல்வதையே மக்கள் கடைப்பிடித்து வாழவேண்டும் என்று பரிசேயரும், ஏரோதியரும் போட்டிபோட்டு மக்களைக் குழப்பி வந்தனர். மக்களும் ஆயனில்லா மந்தைகள்போல செய்வதறியாது வேஷம் தரித்த ஓநாய்களின் பிடியில் சிக்கித் தவித்து வந்தனர். அவர்களது தப்பான சிந்தனைகள், போதனைகள் மக்களிடையே புளிப்புமாவைப் போன்று பரவிவந்தன. அவர்களும் கடவுளின் கட்டளைகள் என்ற பெயரால் மக்களை அடக்கியாண்டு வந்தனர். இந்நிலையை இறைமகன் இயேசு தம் சீடர்களுக்கு விளக்கி, அதிலிருந்து எப்படி அவர்கள் தங்களைக் காப்பாறிக்கொள்ள வேண்டும் என்று போதித்துக் கொண்டிருந்த முக்கியமான தருணம் அது. ஆனால், அதன் முக்கியத்தை உணராமல், சீடர்களோ தம் வயிற்றுப் பசிக்கு அப்பம் எடுத்துவர மறந்து போனதையிட்டு கவலைப்பட்டுக் கொண்டிருந்தமை இறைமகனுக்கு பெரிதும் மனவேதனையை ஏற்படுத்தியது. எனவே, அவர் அவர்களைக் கடிந்துகொள்ள வேண்டியதாயிற்று. நோவாவின் காலத்தில் வாழ்ந்த மக்களும்கூட மண்ணுலகில் மனிதரை உருவாக்கியதற்காக ஆண்டவர் மனம் வருந்தும் அளவுக்கு தம் இதயச் சிந்தனைகள் மூலம் நாள் முழுவதும் தீமையையே உருவாக்கி வந்தனர். ஆண்டவரது உள்ளம் துயரமடைந்து. தாம் படைத்த மனிதர் முதல் கால்நடைகள், ஊர்வன, வானத்துப் பறவைகள் வரை அனைத்தையும் மண்ணிலிருந்து அழித்தொழிப்பேன் எனக் கூறும் அளவுக்கு மனிதருடைய செயற்பாடுகள் இருந்து வந்தன. இன்று நமது சிந்தனைகள், கவலைகள், வாழ்க்கை முறைகள் எவ்வாறாக அமைந்திருக்கின்றன என்பதை சிந்திக்க இன்றைய இறைவார்த்தைகள் நம்மை அழைத்து நிற்கின்றன. கொள்ளை நோய், பொருளாதார நெருக்கடி, நிட்சயமற்ற எதிர்காலம் போன்ற பல இன்னல்களுக்கு இவ்வுலகம் உள்ளாகியிருக்கும் இவ்வேளையில், ஆண்டவர் கட்டளையிட்ட அனைத்தையும் செய்த நோவாவைப்போல நாம் வாழ்ந்துவந்தால் ஆண்டவரின் அருள்பார்வை நமக்கும் நம் சந்ததிக்கும் நிட்சயம் கிடைக்கும்.

## பெப்ரவரி – 17 –புதன்

**மரியாவின் ஊழியர் சபை நிறுவனர்கள்**

**திருநீற்றுப்புதன்**

---

## முதல் வாசகம்: யோவே 2:12-18

இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து, அழுது புலம்பிக்கொண்டு, உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள் என்கிறார் ஆண்டவர். நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக்கொண்டு உங்கள் கடவுளாகிய



## நற்செய்தி: மாற் 104:1-2, 27-30

இயேசு மக்கள் கூட்டத்தை மீண்டும் தம்மிடம் வரவழைத்து, அவர்களை நோக்கி, “நான் சொல்வதை அனைவரும் கேட்டுப் புரிந்து கொள்ளுங்கள். வெளியேயிருந்து மனிதருக்குள்ளே சென்று அவர்களைத் தீட்டுப்படுத்தக் கூடியது ஒன்றுமில்லை. மனிதருக்கு உள்ளேயிருந்து வெளியே வருபவையே அவர்களைத் தீட்டுப் படுத்தும். (கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும் “) என்று கூறினார். அவர் மக்கள் கூட்டத்தை விட்டு வீட்டிற்குள் வந்தபோது அவருடைய சீடர் அவரிடம் இந்த உவமையைப்பற்றிக் கேட்க, அவர் அவர்களிடம், “நீங்களுமா இந்த அளவுக்குப் புரிந்துகொள்ளாமல் இருக்கிறீர்கள்? வெளியேயிருந்து மனிதருக்குள்ளே செல்லும் எதுவும் அவர்களைத் தீட்டுப் படுத்த முடியாது என உங்களுக்குத் தெரியாதா? ஏனென்றால், அது அவர்களுடைய உள்ளத்தில் நுழையாமல் வயிற்றுக்குச் சென்று கழிப்பிடத்திற்குப் போய் விடுகிறது” என்றார். இவ்வாறு அவர் எல்லா உணவுப் பொருள்களும் தூயனவென்று குறிப்பிட்டார். மேலும் “மனிதருக்கு உள்ளேயிருந்து வருவதே அவர்களைத் தீட்டுப்படுத்தும். ஏனெனில் மனித உள்ளத்திலிருந்தே பரத்தைமை, களவு, கொலை, விபசாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம், காமவெறி, பொறாமை, பழிப்புரை, செருக்கு, மதிகேடு ஆகியவற்றைச் செய்யத் தூண்டும் தீய எண்ணங்கள் வெளிவருகின்றன. தீயனவாகிய இவை அனைத்தும் உள்ளத்திலிருந்து வந்து மனிதரைத் தீட்டுப் படுத்துகின்றன” என்றார்.

**தியானம்:** திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ அழிக்க வரவில்லை என இயேசு கூறுவதைக் காணக்கூடிதாக இருக்கின்றது. திருச்சட்டம் என்பது யூத மக்களுக்கு மோசே வழியாக வழங்கப்பட்டது. இறைவாக்கு என்பது கடவுளின் திட்டத்தை மக்களுக்குக் கடவுளின் பெயரால் எடுத்துரைத்த இறைவாக்கினரின் போதனையைக் குறிக்கும். எனவே இயேசு யூத சமயப் போதனைகளைத் தாம் அழிக்க வரவில்லை என்றும் அவற்றை “நிறைவேற்ற” வந்தேன் என்று கூறுகின்றார். இயேசு பல நேரங்களில் யூத சமயப் பழக்கங்களைக் கடுமையாக விமர்சித்ததும் உண்டு. சமயச் சடங்குகளுக்கு முன்னிடம் கொடுத்து உள்ளத்தின் ஆழத்தில் நேர்மையின்றி நடந்தவர்களை இயேசு கடிந்தும் உண்டு. இயேசு திருச்சட்டத்தையும் இறைவாக்குகளையும் நிறைவேற்ற வந்ததாகவும் கூறுகின்றார். இங்கே இரு முக்கியமான உண்மைகளைக் காண கூடியதாக இருக்கின்றது. முதலாவதாக இயேசு பழைய ஏற்பாட்டு மரபைப் புறக்கணிக்கவில்லை என்பதாகும். கடவுள் யூத மக்களுக்குத் தம்மை வெளிப்படுத்தி அவர்களுக்கு ஒரு வாழ்க்கை முறையை அளித்து வழிநடத்தியதை இயேசு ஏற்றுக்கொள்ளுகின்றார். யூத சமயத்தில் வழக்கிலிருந்த ஆன்மீக நெறியே இயேசுவின் வாழ்க்கைக்கு ஒளியாக இருந்தது. இரண்டாவது உண்மை இயேசு ஆற்றிய பணி பற்றியது. இயேசு பழைய ஏற்பாட்டு நெறியை “நிறைவு” செய்தது. அந்த நெறியை அழிக்காமல் அதன் அடித்தளத்தில் ஒரு புதிய நெறியை அறிவித்ததாகும். இயேசு வழங்கிய புதிய நெறி அன்புக் கட்டளையாகும் பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்ற இக்கட்டளைக்கு இயேசு இங்கு

புதிய அர்த்தம் கொடுத்துள்ளார். கடவுளின் அன்பை மக்களுக்கு எடுத்துக்காட்டி அதை அவர்களோடு பகிர்ந்து வாழ்வதே தமது பணி என இயேசு போதித்தார். கடவுளின் உள் இயல்பு அன்புதானே அந்த கடவுளே நமக்கு தந்தையாக இருந்து நம்மை எல்லா தீங்குக்கும் விலக்கி பாதுகாத்து வழிநடத்துகின்றார். அவர் அனுப்பிய மீட்பராக வந்த இயேசு கடவுளின் அன்பு வெளிப்பாடாகத் தம்மை அடையாளம் காட்டியதோடு கடவுளின் ஆவியால் நம்மை தொடர்ந்தும் நடத்துகின்றார். இயேசுவின் திருச்சட்டத்தையும் இறைவாக்குகளையும் நிறைவேற்றினார். எனவே இயேசுவின் பின்செல்கின்ற எங்களையும் அவருடைய பணியை தொடர்ந்து செய்ய இயேசு எங்களுக்கும் அழைப்புவிடுக்கின்றார் ஆமென்.

## பெப்ரவரி – 11 – வியாழன்

### தூய லூர்து அன்னை

---

### முதல் வாசகம்: தொநூ 2:18-25

பின்பு ஆண்டவராகிய கடவுள், மனிதன் தனிமையாக இருப்பது நல்லதன்று அவனுக்குத் தகுந்த துணையை உருவாக்குவேன் என்றார். ஆண்டவராகிய கடவுள் மண்ணிலிருந்து எல்லாக் காட்டு விலங்குகளையும் வானத்துப் பறவைகளையும் உருவாக்கி, அவற்றிற்கு மனிதன் என்ன பெயரிடுவான் என்று பார்க்க, அவற்றை அவனிடம் கொண்டு வந்தார். உயிருள்ள ஒவ்வொன்றுக்கும் அவன் என்ன பெயரிட்டானோ அதுவே அதன் பெயராயிற்று. கால்நடைகள், வானத்துப் பறவைகள், காட்டு விலங்குகள் ஆகிய எல்லாவற்றிற்கும் மனிதன் பெயரிட்டான் தனக்குத் தகுந்த துணையையோ மனிதன் காணவில்லை. ஆகவே ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கு ஆழ்ந்த உறக்கம் வரச்செய்து, அவன் உறங்கும் பொழுது அவன் விலா எலும்பு ஒன்றை எடுத்துக்கொண்டு, எடுத்த இடத்தைச் சதையால் அடைத்தார். ஆண்டவராகிய கடவுள் தாம் மனிதனிடமிருந்து எடுத்த விலா எலும்பை ஒரு பெண்ணாக உருவாக்கி மனிதனிடம் அழைத்துவந்தார். அப்பொழுது மனிதன், “இதோ! இவளே என் எலும்பின் எலும்பும் சதையின் சதையும் ஆனவள் ஆணிடமிருந்து எடுக்கப்பட்டதால், இவள் பெண் என்று அழைக்கப்படுவாள்” என்றான். இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான் இருவரும் ஒரே உடலாய் இருப்பர். மனிதன், அவன் மனைவி ஆகிய இருவரும் ஆடையின்றி இருந்தனர். ஆனால் அவர்கள் வெட்கப்படவில்லை.

### நற்செய்தி: மாற் 7:24-30

இயேசு எழுந்து அங்கிருந்து புறப்பட்டுத் தீர் பகுதிக்குள் சென்றார். அங்கே அவர் ஒரு வீட்டிற்குள் போனார் தாம் அங்கிருப்பது எவருக்கும் தெரியாதிருக்க வேண்டுமென்று விரும்பியும் அதை மறைக்க இயலவில்லை. உடனே பெண் ஒருவர் அவரைப் பற்றிக்



## பெப்ரவரி – 16 – செவ்வாய்

### தூய ஒனேசிமுஸ்

---

### முதல் வாசகம்: தொநூ 6:5-8, 7:1-5,10

மண்ணுலகில் மனிதர் செய்யும் தீமை பெருகுவதையும் அவர்களின் இதயச் சிந்தனைகளெல்லாம் நாள் முழுவதும் தீமையையே உருவாக்குவதையும் ஆண்டவர் கண்டார். மண்ணுலகில் மனிதரை உருவாக்கியதற்காக ஆண்டவர் மனம் வருந்தினார். அவரது உள்ளம் துயரமடைந்தது. அப்பொழுது ஆண்டவர், “நான் படைத்த மனிதரை மண்ணிலிருந்து அழித்தொழிப்பேன். மனிதர்முதல் கால்நடைகள், ஊர்வன, வானத்துப் பறவைகள்வரை அனைத்தையும் அழிப்பேன். ஏனெனில் இவற்றை உருவாக்கியதற்காக நான் மனம் வருந்துகிறேன்” என்றார். ஆனால் நோவாவுக்கு ஆண்டவரின் அருள் பார்வை கிடைத்தது. அப்பொழுது ஆண்டவர் நோவாவிற்குக் கூறியது “நீ உன் குடும்பத்தார் அனைவரோடும் பேழைக்குள் செல். ஏனெனில், இத்தலைமுறையில் உன்னையே நான் நேர்மையானவனாகக் காண்கிறேன். தக்க விலங்குகள் எல்லாவற்றிலிருந்தும் ஆணும் பெண்ணுமாக ஏழு சோடிகளையும், தகாத விலங்குகளிலிருந்து ஆணும் பெண்ணுமாக ஒரு சோடியையும். வானத்துப் பறவைகளிலிருந்து ஆணும் பெண்ணுமாக ஏழு சோடிகளையும் மண்ணுலகெங்கும் அவற்றின் இனங்கள் உயிர் பிழைத்துக் கொள்வதற்காக உன்னுடன் சேர்த்துக் கொள். ஏனெனில் இன்னும் ஏழு நாள்களில் மண்ணுலகின்மேல் நாற்பது பகலும் நாற்பது இரவும் நான் மழை பெய்விக்கப்போகிறேன். நான் உருவாக்கிய உயிரினங்களை எல்லாம் இந்த நிலத்திலிருந்து அழித்தொழிப்பேன்.” ஆண்டவர் கட்டளையிட்டபடியே நோவா எல்லாவற்றையும் செய்தார். ஏழு நாள்களுக்குப்பின் மண்ணுலகில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

### நற்செய்தி: மாற் 8:14-21

சீடர்கள் தங்களுக்குத் தேவையான அப்பங்களை எடுத்துச்செல்ல மறந்துவிட்டார்கள். படகில் அவர்களிடம் ஓர் அப்பம் மட்டுமே இருந்தது. அப்பொழுது இயேசு, “பரிசேயர், ஏரோதியர் ஆகியோரது புளிப்பு மாவைக் குறித்து மிகவும் கவனமாயிருங்கள்” என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்களோ தங்களிடம் அப்பம் இல்லையே என்று ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருந்தார்கள். இதை அறிந்த இயேசு அவர்களை நோக்கி, “நீங்கள் உங்களிடம் அப்பம் இல்லை என ஏன் பேசிக் கொள்ளுகிறீர்கள்? இன்னுமா உணராமலும் புரிந்து கொள்ளாமலும் இருக்கிறீர்கள்? உங்கள் உள்ளம் மழுங்கியா போயிற்று? கண்ணிருந்தும் நீங்கள் காண்பதில்லையா? காதிருந்தும் நீங்கள் கேட்பதில்லையா? ஏன், உங்களுக்கு நினைவில்லையா? ஐந்து அப்பங்களை நான் ஐயாயிரம் பேருக்குப் பிட்டு அளித்த போது, மீதியான துண்டுகளை எத்தனை கூடைகள் நிறைய எடுத்தீர்கள்?” என்று அவர் கேட்க, அவர்கள் “பன்னிரண்டு” என்றார்கள். “ஏழு

அவளும் மகன் ஒருவனைப் பெற்று அவனுக்குச் சேத்து என்று பெயரிட்டாள். “காயின் ஆபேலைக் கொன்றதால் அவனுடைய இடத்தில் இன்னொருவனைக் கடவுள் வைத்தருளினார்” என்றாள்.

## நற்செய்தி: மாற் 8:11-13

பரிசேயர் வந்து இயேசுவோடு வாதாடத் தொடங்கினர் வானத்திலிருந்து அடையாளம் ஒன்றைக் காட்டும்படி அவரைச் சோதித்தனர். அவர் பெருமூச்சுவிட்டு, “இந்தத் தலைமுறையினர் அடையாளம் கேட்பதேன்? இத்தலைமுறையினருக்கு அடையாளம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார். அவர்களை விட்டு அகன்று மீண்டும் படகேறி அவர் மறு கரைக்குச் சென்றார்.

**தியானம்:** இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே, இன்றைய நாளிலே ஆண்டவர் நம்மை தேற்றுகிறவராய் திடப்படுத்துகிறவராய், இருக்கிறார். நாம் வாழுகிற சமுதாயம் நம்மை நம்முடைய விசுவாசத்தை பல நேரங்களில் சுட்டிக்காட்டுகிறது கேள்வி கேட்கிறது. நாம் பல விதங்களில், கேள்வி கேட்க படுகிறவர்களாகவும், இருக்கிறோம். கிறிஸ்துவை சுமப்பதனால், கிறிஸ்துவைப் பின்பற்றுவதனால், கிறிஸ்தவர்களாய் இருப்பதனால் என்ன பயன் ஒரு அடையாளம் காட்டுங்கள் என்று சொல்லி நம்மை ,நம்முடைய வாழ்வை கேள்வியாய் மாற்றுகிற மக்கள் மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். பிரியமானவர்களே ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து அடையாளத்திற்காக வரவில்லை நம்மை அடையாளமாக மாற்ற அவர் வந்தார். நமக்கு ஒரு அடையாளத்தை அவர் கொடுத்தார். அந்த அடையாளம் நான் அன்பு நிறைந்தவன் என்பதை வெளிப்படுத்துகின்ற அடையாளம். நம்முடைய குடும்பம் அன்பு நிறைந்தது என்பதை வெளிப்படுத்துகின்ற ஒரு குடும்பம், நம்முடைய சூழ்நிலை அன்பு என்கிற சூழ்நிலை நம்முடைய பேச்சு அன்பு, நம்முடைய வார்த்தைகள் அன்பு, இந்த அன்பை வெளிப்படுத்தவே அவர் வந்தார். இந்த அன்பின் உச்சக்கட்டமாக அவர் தம்முடைய உயிரையே கொடுத்தார். பிரியமானவர்களே நாமும் நம்மை, நம் வாழ்வை அன்பு என்கிற அடையாளத்தில் இணைத்துக்கொள்வோம். நாமும் நம்முடைய குடும்பத்தை அன்பு என்கிற அடையாளத்தில் இணைத்திருப்போம். அன்பு என்கிற அடையாளத்தில் நாம் இணைத்து வாழுகிற பொழுது நம்முடைய குடும்பங்களில் இருக்கிற ஆசீர்வாதங்கள் பலருடைய வாழ்வுக்கு அர்த்தமாய், அடையாளமாய் மாறுவதை நாம் கண்கூடாய் பார்க்க முடியும். ஆண்டவர் நம்மை நம் வாழ்வை ஆசீர்வதிப்பாராக. ஆமென்



கேள்விப்பட்டு உள்ளே வந்து, அவர் காலில் விழுந்தார். அவருடைய மகளைத் தீய ஆவி பிடித்திருந்தது. அவர் ஒரு கிரேக்கப்பெண் சிரிய பெனிசிய இனத்தைச் சேர்ந்தவர். அவர் தம் மகளிடமிருந்து பேயை ஓட்டிவிடுமாறு அவரை வேண்டினார். இயேசு அவரைப் பார்த்து, “முதலில் பிள்ளைகள் வயிறார உண்ணட்டும். பிள்ளைகளுக்குரிய உணவை எடுத்து நாய்க் குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல” என்றார். அதற்கு அப்பெண், “ஆம் ஐயா, ஆனாலும் மேசையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் சிறு பிள்ளைகள் சிந்தும் சிறு துண்டுகளைத் தின்னுமே” என்று பதிலளித்தார். அப்பொழுது இயேசு அவரிடம், “நீர் இப்படிச் சொன்னதால் போகலாம் பேய் உம்மகளை விட்டு நீங்கிற்று” என்றார். அப்பெண் தம் வீடு திரும்பியதும் தம் பிள்ளை கட்டிலில் படுத்திருக்கிறதையும் பேய் ஓடிவிட்டதையும் கண்டார்.

**தியானம்:** இன்று திருச்சபையானது லூர்து அன்னையின் திருநாளை கொண்டாடுகிறது. லூர்து அன்னை தமது காட்சியின் வழியாக மக்களை மனம் மாற அழைத்தார். நாம் அடுத்த வாரம் மனமாற்றத்தின் காலம்-ாகிய தவக்காலத்தை ஆரம்பிக்க இருக்கின்றோம், எனவே அன்னையின் அழைப்பை ஏற்று வாழ முயல்வோம். முதல் வாசகத்தில் கடவுள் மனிதனின் தனிமையை போக்க நினைக்கின்றார். அவனுக்கேற்ற துணையை உருவாக்குகின்றார். அதனால் கணவன் மனைவி இருவரும் ஈர் உடல் ஓர் உயிராய் வாழவேண்டும் என்ற செய்தியை நமக்கு கூறி நிற்கின்றார். இன்று அப்படியான குடும்பங்களை காண முடிகின்றதா? சமுதாயத்தின் மாற்றமும், விஞ்ஞானத்தின் வளர்ச்சியும், தொழில் நுட்ப வளர்ச்சியும் இதற்கு தடைகளாக உள்ளன. இவ்வாறான தடைகளை தாண்டிய வாழ்க்கையைத்தான் நாம் வாழ அழைக்கப்பட்டுள்ளோம். நற்செய்தியில் கானானியப் பெண்ணிற்கு யேசு கொடுத்த பதில் ஏற்க கூடியது அல்ல. யாரையும் மனம் நோக செய்யக்கூடியது. ஆனாலும் தனது மகளுக்கு சுகம் வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே அந்த தாயின் உல்ளத்தில் ஓங்கி நின்றது. அதனால் தன்னை நாய்க்கு சமமாக யேசு ஒப்பிட்டாலும், அதனை பொருட்படுத்தாது தனது விசுவாசத்தை வெளிப்படுத்தி வேண்டுதலை பெற்றுக் கொண்டார். ஒரு அன்னையின் பாசம் என்பது அளவிட முடியாதது. எனவே லூர்து அன்னையிடம் எமது குடுப்பத்தை ஒப்புக்குடுப்போம். அவர் எம்மிடம் எதிர்பார்க்கும் தாழ்ச்சியுள்ள வாழ்வை வாழ்வோம்.

# பெப்ரவரி – 12 – வெள்ளி

**தூய வால்பர்கா**

---

## முதல் வாசகம்: தொநூ 3:1-8

ஆண்டவராகிய கடவுள் உருவாக்கிய காட்டு விலங்குகளிலெல்லாம் பாம்பு மிகவும் சூழ்ச்சிமிக்கதாக இருந்தது. அது பெண்ணிடம், “கடவுள் உங்களிடம் தோட்டத்திலுள்ள எல்லா மரங்களிலிருந்தும் உண்ணக்கூடாது என்றது உண்மையா?” என்று கேட்டது. பெண்

பாம்பிடம், "தோட்டத்தில் இருக்கும் மரங்களின் பழங்களை நாங்கள் உண்ணலாம். ஆனால் தோட்டத்தின் நடுவில் உள்ள மரத்தின் கனியை மட்டும் நீங்கள் உண்ணக்கூடாது அதைத் தொடவும் கூடாது. மீறினால் நீங்கள் சாவீர்கள் என்று கடவுள் சொன்னார்", என்றாள். பாம்பு பெண்ணிடம், "நீங்கள் சாகவே மாட்டீர்கள் ஏனெனில் நீங்கள் அதிலிருந்து உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் கடவுளைப் போல் நன்மை தீமையை அறிவீர்கள் என்பது கடவுளுக்குத் தெரியும்" என்றது. அந்த மரம் உண்பதற்குச் சுவையானதாகவும் கண்களுக்குக் களிப்பூட்டுவதாகவும் அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கதாகவும் இருந்ததைக் கண்டு, பெண் அதன் பழத்தைப் பறித்து உண்டாள். அதைத் தன்னுடனிருந்த தன் கணவனுக்கும் கொடுத்தாள். அவனும் உண்டான். அப்பொழுது அவர்கள் இருவரின் கண்களும் திறக்கப்பட்டன அவர்கள் தாங்கள் ஆடையின்றி இருப்பதை அறிந்தனர். ஆகவே, அத்தி இலைகளைத் தைத்துத் தங்களுக்கு ஆடைகளைச் செய்துகொண்டனர். மென்காற்று வீசிய பொழுதினிலே, தோட்டத்தில் ஆண்டவராகிய கடவுள் உலவிக்கொண்டிருந்த ஓசை கேட்டு, மனிதனும் அவன் மனைவியும் ஆண்டவராகிய கடவுளின் திருமுன்னிருந்து விலகி, தோட்டத்தின் மரங்களுக்கு இடையே ஒளிந்து கொண்டனர்.

**நற்செய்தி: மாற் 7:31-37**

மீண்டும் இயேசு தீர் பகுதியை விட்டு, சீதோன் வழியாகச் சென்று தெக்கப்பொலி பகுதி நடுவே வந்து, கலிலேயக் கடலை அடைந்தார். காது கேளாதவரும் திக்கிப்பேசுபவருமான ஒருவரைச் சிலர் அவரிடம் கொண்டு வந்து, அவர்மீது கைவைத்துக் குணமாக்குமாறு அவரை வேண்டிக் கொண்டனர். இயேசு அவரைக் கூட்டத்திலிருந்து தனியே அழைத்துச் சென்று, தம் விரல்களை அவர் காதுகளில் இட்டு, உமிழ்நீரால் அவர் நாவைத் தொட்டார். பிறகு வானத்தை அண்ணாந்து பார்த்து, பெருமூச்சு விட்டு, அவரை நோக்கி "எப்பத்தா" அதாவது "திறக்கப்படு" என்றார். உடனே அவருடைய காதுகள் திறக்கப்பட்டன நாவும் கட்டவிழ்ந்தது. அவர் தெளிவாகப் பேசினார். இதை எவருக்கும் சொல்ல வேண்டாமென்று அவர்களுக்கு அவர் கட்டளையிட்டார். அவரது கட்டளைக்கு நேர்மாறாக இன்னும் மிகுதியாய் அவர்கள் அதை அறிவித்து வந்தார்கள். அவர்கள் அளவு கடந்த வியப்பில் ஆழ்ந்தவர்களாய் , "இவர் எத்துணை நன்றாக யாவற்றையும் செய்து வருகிறார்! காதுகேளாதோர் கேட்கவும் பேச்சற்றோர் பேசவும் செய்கிறாரே!" என்று பேசிக்கொண்டார்கள்.

**தியானம்:** இன்றைய முதல் வாசகம் உலகின் படைப்பின் உன்னத படைப்பாக இறைவன் மனிதனைப் படைத்தார். அவன் யாவற்றையும் ஆண்டு வழிநடத்தும்படியும் நடுவிலே இருக்கும் மரத்தின் கனியை தொடவும் வேண்டாம், உண்ணவும் வேண்டாம் என்று அவர்களுக்கு கூறினார். ஆனால் அலகையின் தந்திரத்தினால் பழத்தை அவர்கள் உண்டு பாவத்திற்கு அடிமையானார்கள். அன்று தொடங்கிய பாவமானது தலைமுறை தலைமுறையாக இற்றவரை பல வடிவங்களில்



# பெப்ரவரி – 15 – திங்கள்

**தூய போத்திதுஸ்**

---

**முதல் வாசகம்: தொநூ 4:1-15, 25**

ஆதாம் தன் மனைவி ஏவாளுடன் கூடி வாழ்ந்தான். அவள் கருவுற்றுக் காயினைப் பெற்றெடுத்தாள். அவள் "ஆண்டவர் அருளால் ஆண் மகன் ஒருவனை நான் பெற்றுள்ளேன்" என்றாள். பின்பு அவள் அவன் சகோதரன் ஆபேலைப் பெற்றெடுத்தாள். ஆபேல் ஆடு மேய்ப்பவன் ஆனான். காயின் நிலத்தைப் பண்படுத்துபவன் ஆனான். சில நாள்கள் சென்றன. காயின் நிலத்தின் பலனிலிருந்து ஆண்டவருக்குக் காணிக்கை கொண்டு வந்தான். ஆபேலும் தன் மந்தையிலிருந்து கொழுத்த தலையீறுகளைக் கொண்டு வந்தான். ஆண்டவர் ஆபேலையும் அவன் காணிக்கையையும் கனிவுடன் கண்ணோக்கினார். ஆனால் காயினையும் அவன் காணிக்கையையும் அவர் கனிவுடன் கண்ணோக்கவில்லை. ஆகவே, காயின் கடுஞ்சினமுற்றான். அவன் முகம் வாடியது. ஆகவே, ஆண்டவர் காயினிடம், "நீ ஏன் சினமுற்றிருக்கிறாய்? உன் முகம் வாடி இருப்பது ஏன்? நீ நல்லது செய்தால் உயர்வடைவாய் அல்லவா? நீ நல்லது செய்யாவிட்டால், பாவம் உன்மேல் வேட்கை கொண்டு உன் வாயிலில் படுத்திருக்கும். நீ அதை அடங்கி ஆளவேண்டும்" என்றார். காயின் தன் சகோதரன் ஆபேலிடம், "நாம் வயல்வெளிக்குப் போவோம்" என்றான். அவர்கள் வெளியில் இருந்தபொழுது, காயின் தன் சகோதரன் ஆபேலின் மேல் பாய்ந்து அவனைக் கொன்றான். ஆண்டவர் காயினிடம், "உன் சகோதரன் ஆபேல் எங்கே?" என்று கேட்டார். அதற்கு அவன், "எனக்குத் தெரியாது. நான் என்ன, என் சகோதரனுக்குக் காவலாளியோ?" என்றான். அதற்கு ஆண்டவர், "நீ என்ன செய்துவிட்டாய்! உன் சகோதரனின் இரத்தத்தின் குரல் மண்ணிலிருந்து என்னை நோக்கிக் கதறிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது, உன் கைகள் சிந்திய உன் சகோதரனின் இரத்தத்தைத் தன் வாய்திறந்து குடித்த மண்ணை முன்னிட்டு, நீ சபிக்கப்பட்டிருக்கின்றாய். நீ மண்ணில் பயிரிடும் பொழுது அது இனிமேல் உனக்குப் பலன் தராது. மண்ணுலகில் நீ நாடோடியாக அலைந்து திரிவாய்" என்றார். காயின் ஆண்டவரிடம், "எனக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை என்னால் தாங்க முடியாததாக இருக்கின்றது. இன்று நீர் என்னை இம்மண்ணிலிருந்து துரத்தியிருக்கின்றீர் உமது முன்னிலையினின்று நான் மறைக்கப்பட்டுள்ளேன். மண்ணுலகில் நான் நாடோடியாக அலைந்து திரிய வேண்டியுள்ளது. என்னைக் காண்கின்ற எவனும் என்னைக் கொல்வானே!" என்றான். ஆண்டவர் அவனிடம் "அப்படியன்று காயினைக் கொல்கின்ற எவனும் ஏழு முறை பழி வாங்கப்படுவான்" என்று சொல்லி, காயினைக் கண்டு பிடிக்கும் எவனும் அவனைக் கொல்லாமல் இருக்க ஆண்டவர் அவன் மேல் ஓர் அடையாளம் இட்டார். ஆதாம் மீண்டும் தன் மனைவியுடன் கூடி வாழ,

பயன்தருவதை நாடாமல், பலரும் மீட்படையும்படி அவர்களுக்குப் பயன் தருவதையே நாடுகிறேன். நான் கிறிஸ்துவைப்போல் நடப்பதுபோன்று நீங்களும் என்னைப்போல் நடவுங்கள்

## நற்செய்தி: மாற் 1:40-45

ஒரு நாள் தொழுநோயாளர் ஒருவர் இயேசுவிடம் வந்து, “நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்” என்று முழந்தாள் படியிட்டு வேண்டினார். இயேசு அவர்மீது பரிவு கொண்டு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு அவரிடம், “நான் விரும்புகிறேன், உமது நோய் நீங்குக!” என்றார். உடனே தொழுநோய் அவரைவிட்டு நீங்க, அவர் நலமடைந்தார். பிறகு அவரிடம், “இதை யாருக்கும் சொல்ல வேண்டாம், கவனமாய் இரும். ஆனால் நீர் போய் உம்மைக் குருவிடம் காட்டி, நோய் நீங்கியதற்காக மோசே கட்டளையிட்டுள்ள காணிக்கையைச் செலுத்தும். நீர் நலமடைந்துள்ளீர் என்பதற்கு அது சான்றாகும்” என்று மிகக் கண்டிப்பாகக் கூறி உடனடியாக அவரை அனுப்பி விட்டார். ஆனால் அவர் புறப்பட்டுச் சென்று இந்தச் செய்தியை எங்கும் அறிவித்துப் பரப்பிவந்தார். அதனால் இயேசு எந்த நகருக்குள்ளும் வெளிப்படையாய்ச் செல்ல முடியவில்லை் வெளியே தனிமையான இடங்களில் தங்கிவந்தார். எனினும் மக்கள் எல்லா இடங்களிலிருந்தும் அவரிடம் வந்து கொண்டிருந்தார்கள்..

**தியானம்:** தொழுநோய் மனிதனை மனித குலத்திலிருந்து பிரிப்பது போல பாவமானது நம்மை இறைவனிடமிருந்து பிரித்து விடுகின்றது. நாம் தூய்மை பெற வேண்டுமென்றால் மன உறுதியோடு இறைவனை தேட வேண்டும். இன்றைய நற்செய்தியில் தொழு நோயாளி ஒருவர் யேசுவிடம் வந்து “நீர் விரும்பினால் எனது நோயை நீக்க உம்மால் முடியும்” என்று வேண்டினார். யேசு பரிவு கொண்டு அவரை தொட்டார்., தொழு நோய் நீங்கியது. யேசுவின் பரிவும் இரக்கமும் இந்த அரும் செயலை நிகழ்த்தியது. இறைமகன் யேசு உண்மையான பரிவிரக்கத்தை நமக்கு கற்றுத்தருகிறார். அதே வேளையில் தொழுநோயாளியின் ஆழ்ந்த விசுவாசம் அங்கே வெளிப்பட்டது. இந்த விசுவாசத்தின் வெளிப்பாட்டைத்தான் நாம் இன்றைய 2ம் வாசகத்தில் காண்கிறோம். புனித பவுல் கூறுகிறார் “நீங்கள் எதை செய்தாலும் இறைவனின் மாட்சிமைக்காகவே செய்யுங்கள். நான் கிறிஸ்த்துவைப் போல் நடப்பது போன்று நீங்களும் நடவுங்கள்” என்று கூறி கிறிஸ்த்துவோடு ஒன்றித்து வாழ எம்மை அழைக்கிறார். ஆகவேதான் நாமும் நற்கருணை மூலமாக கிறிஸ்த்துவின் உடனிருப்பை உறுதிப் படுத்திக் கொள்வோம். அவரது விருப்பத்திற்கு நம்மை அர்ப்பணிக்கின்ற போது நாம் நமது வாழ்வில் நிறைவைப் பெற்றுக்கொள்வோம்



உருவெடுத்திருக்கின்றது. இறைவன் எவ்வாறு உலகமெங்கும் இருக்கிறாரோ அதேபோன்று சாத்தானானவனும் சுற்றித்திரிந்து எமது பலவீன நேரங்களிலே பலவித கவர்ச்சிகளால் எங்களைக் கவர்ந்து பாவத்திற்கு அடிமையாக்கிவிடுகின்றான். இன்று சாத்தானின் பிடியிலிருந்து நாங்கள் விடுதலைபெற நல்லது கெட்டது எது என அறிந்து கொள்ள தெளிவான ஞானம், அறிவு தேவை. எனவே இதற்காக நாங்கள் இறைவனிடம் மன்றாடுவோம். அப்போதுதான் எமது மனக்கண்கள் திறக்கப்படும், நாங்களும் இருளிலிருந்து ஒளியினைக் கண்டடைவோம். இன்றைய நற்செய்தி வாசகத்திலும் காது கேளாதவரும், திக்கி பேசுபவரான ஒருவரை இயேசு குணப்படுத்துகிறார். அவர் கைகளை வைத்து உமிழ் நீரினால் வானத்தை நோக்கிப் பெருமூச்சு விட்டு “எப்பத்தா” திறக்கப்படு என்று அவருக்கு கட்டளையிட்டார். அப்பொழுது அவரது கட்டுக்கள் யாவும் அவிழ்க்கப்பட்டன. அவரும் துள்ளிக் குதித்து இயேசுவைப்பற்றி புகழ்ந்துகொண்டே இருந்தார். இன்று நாங்கள் இறைவனைத்தேடி அவரில் நிலைத்து வாழும் பொழுது சாத்தானானவன் பலவழிகளில் எம்மையும் பாவத்திற்கு அடிமைப்படுத்தி விடுகிறான். இதனால் எமது கண்கள மறைக்கப்பட்டு இறைவனைக் காணமுடியாது அலைந்து திரிகின்றோம். எனவே நாங்கள் இயேசுவைக் காணவேண்டுமாயின் சாத்தானின் பிடிக்குள் நாங்கள் அகப்படாது வாழ நன்மை எது? தீமை எது? என்று அறிந்து ஒளியின் பாதையில் நடக்க இறைவனிடம் வரம் வேண்டுவோம்.

.

# பெப்ரவரி – 13 – சனி

**தூய ரிக்ஸி கத்தரின்**

---

## முதல் வாசகம்: தொநூ 3:9-24

ஆண்டவராகிய கடவுள் மனிதனைக் கூப்பிட்டு, “நீ எங்கே இருக்கின்றாய்?” என்று கேட்டார். ‘உம் குரல் ஒலியை நான் தோட்டத்தில் கேட்டேன். ஆனால், எனக்கு அச்சமாக இருந்தது. ஏனெனில், நான் ஆடையின்றி இருந்தேன். எனவே, நான் ஒளிந்து கொண்டேன் என்றான் மனிதன். ‘நீ ஆடையின்றி இருக்கின்றாய் என்று உனக்குச் சொன்னது யார்? நீ உண்ணக்கூடாது என்று நான் விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டாயோ? என்று கேட்டார். அப்பொழுது அவன், “என்னுடன் இருக்கும்படி நீர் தந்த அந்தப் பெண், மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள் நானும் உண்டேன்” என்றான். ஆண்டவராகிய கடவுள், “நீ ஏன் இவ்வாறு செய்தாய்?” என்று பெண்ணைக் கேட்க, அதற்குப் பெண், “பாம்பு என்னை ஏமாற்றியது, நானும் உண்டேன்” என்றாள். ஆண்டவராகிய கடவுள் பாம்பிடம், “நீ இவ்வாறு செய்ததால், கால்நடைகள், காட்டுவிலங்குகள் அனைத்திலும் சபிக்கப்பட்டிருப்பாய். உன் வயிற்றினால் ஊர்ந்து உன் வாழ்நாள் எல்லாம் புழுதியைத் தின்பாய். உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்”

என்றார். அவர் பெண்ணிடம் “உன் மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக்குவேன் வேதனையில் நீ குழந்தைகள் பெறுவாய். ஆயினும் உன் கணவன் மேல் நீ வேட்கை கொள்வாய் அவனோ உன்னை ஆள்வான்” என்றார். அவர் மனிதனிடம், “உன் மனைவியின் சொல்லைக் கேட்டு, உண்ணக்கூடாது என்று நான் கட்டளையிட்டு விலக்கிய மரத்திலிருந்து நீ உண்டதால் உன் பொருட்டு நிலம் சபிக்கப்பட்டுள்ளது உன் வாழ்நாளெல்லாம் வருந்தி அதன் பயனை உழைத்து நீ உண்பாய். முட்செடியையும் முட்புதரையும் உனக்கு அது முளைப்பிக்கும். வயல் வெளிப் பயிர்களை நீ உண்பாய். நீ மண்ணிலிருந்து உருவாக்கப்பட்டதால் அதற்குத் திரும்பும் வரை நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உன் உணவை உண்பாய். நீ மண்ணாய் இருக்கிறாய் மண்ணுக்கே திரும்புவாய்” என்றார். மனிதன் தன் மனைவிக்கு “ஏவாள்” என்று பெயரிட்டாள் ஏனெனில் உயிருள்ளோர் எல்லோருக்கும் அவளே தாய். ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கும் அவன் மனைவிக்கும் தோல் ஆடைகள் செய்து அவர்கள் அணியச் செய்தார். பின்பு ஆண்டவராகிய கடவுள், “மனிதன் இப்பொழுது நம்முள் ஒருவர் போல் நன்மை தீமை அறிந்தவன் ஆகிவிட்டான். இனி அவன் என்றென்றும் வாழ்வதற்காக, வாழ்வின் மரத்திலிருந்தும் பறித்து உண்ணக் கையை நீட்டிவிடக் கூடாது” என்றார். எனவே ஆண்டவராகிய கடவுள் அவன் உருவாக்கப்பட்ட அதே மண்ணைப் பண்படுத்த அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியே அனுப்பி விட்டார். இவ்வாறாக, அவர் மனிதனை வெளியே துரத்திவிட்டார். ஏதேன் தோட்டத்திற்குக் கிழக்கே வாழ்வின் மரத்திற்குச் செல்லும் வழியைக் காப்பதற்குக் கெருபுகளையும் சுற்றிச் சுழலும் சுடரொளி வாளையும் வைத்தார்.

## நற்செய்தி: மாற் 8:1-10

அந்நாள்களில் மீண்டும் பெருந்திரளான மக்கள் கூடியிருந்தார்கள். உண்பதற்கு அவர்களிடம் ஒன்றுமில்லை. இயேசு தம் சீடரை வரவழைத்து அவர்களிடம், “நான் இம்மக்கள் கூட்டத்தின் மீது பரிவுகொள்கிறேன். ஏற்கெனவே மூன்று நாள்களாக இவர்கள் என்னுடன் இருக்கிறார்கள். உண்பதற்கும் இவர்களிடம் எதுவுமில்லை. நான் இவர்களைப் பட்டினியாக வீட்டிற்கு அனுப்பிவிட்டால் வழியில் தளர்ச்சி அடைவார்கள். இவர்களுள் சிலர் நெடுந்தொலையிலிருந்து வந்துள்ளனர்” என்று கூறினார். அதற்கு அவருடைய சீடர்கள், “இப்பாலைநிலத்தில் இவர்களுக்குப் போதுமான உணவு அளிப்பது எப்படி?” என்று கேட்டார்கள். அப்போது அவர் அவர்களைப் பார்த்து, “உங்களிடம் எத்தனை அப்பங்கள் உள்ளன?” என்று கேட்டார். அவர்கள் “ஏழு” என்றார்கள். தரையில் அமர மக்களுக்கு அவர் கட்டளையிட்டார் பின்பு அந்த ஏழு அப்பங்களையும் எடுத்து, கடவுளுக்கு நன்றி செலுத்தி, பிட்டு, பரிமாறும்படி தம் சீடர்களிடம் கொடுக்க, அவர்களும் மக்களுக்கு அளித்தார்கள். சிறு மீன்கள் சிலவும் அவர்களிடம் இருந்தன. அவற்றின்மீது அவர் ஆசிகூறிப் பரிமாறச் சொன்னார். அவர்கள் வயிறார உண்டார்கள். மீதியாய் இருந்த துண்டுகளை ஏழு கூடைகள் நிறைய எடுத்தார்கள். அங்கு இருந்தவர்கள்



ஏறக்குறைய நாலாயிரம் பேர். பின்பு அவர் அவர்களை அனுப்பிவிட்டார். உடனடியாகத் தம் சீடருடன் படகேறித் தல்மனுத்தா பகுதிக்குச் சென்றார்.

**தியானம்:** இன்றைய வாசகங்கள் கடவுளின் கோபத்தையும், பரிவையும் ஒன்று சேர காட்டுகின்றன. முதல் வாசகத்தில் மனிதன் கடவுளின் கட்டளையை மீறுகின்றான், அதனால் கடவுள் அவன்மேல் கோபம் கொள்கின்றார். அற்ப ஆசை அவர்களைப் பாவத்தில் தள்ளியது. அதனால் அவர்கள் கடவுளின் அன்பிலிருந்தும் வளாமான வாழ்வில் இருந்தும் தூக்கி எறியப் படுகின்றார்கள். இதுவரை அவர்கள் அனுபவித்த செல்வம் எல்லாம் பறிக்கப்பட்டு அவர்கள் வெளியே அனுப்பப் படுகின்றார்கள். இங்கே மனிதன் வெறுமையாக வெளியே வருகின்றான். ஆனால் நற்செய்தியில் மனிதன் வார்த்தை என்னும் உணவாலும், அபங்களாலும் உணவூட்டப்பட்டு மகிழ்வுடன் அனுப்பப் படுகின்றான். இரண்டிலும் மனிதன் வெளியே அனுப்பப் படுகின்றான். ஆனால் அனுப்பப்படும் விதம் வேறுபடுகின்றது. இதன் மூலம் கடவுளின் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடந்தால் நிறைவைக் காணமுடியும் என்பதனை நாம் உணரலாம். எனவே நாமும் ஆதி மனிதர்கள் செய்த தவறை மீண்டும் செய்யாமல், கடவுளின் சித்தம் அறிந்து நடக்க முயல்வோம்.

# பெப்ரவரி – 14 – பொதுக்காலத்தின் 6ம் ஞாயிறு

---

## முதல் வாசகம்: லேவி 13:1-2,44-46

ஆண்டவர் மோசேயிடமும் ஆரோனிடமும் உரைத்தது “”ஒருவர் உடலில் தோல்மீது தொழுநோய் போன்று, ஏதேனும் தடிப்போ, சொறி சிரங்கோ, வெண்படலமோ தோன்ற, அது தொழுநோயென ஐயமுற்றால், அவர் குருவாகிய ஆரோனிடம் அல்லது குருக்களாகிய அவர் புதல்வரில் ஒருவரிடம் கொண்டு வரப்படவேண்டும். அவர் தொழுநோயாளி. அவர் தீட்டுள்ளவர். அவர் தீட்டுள்ளவர், எனக் குரு அறிவிப்பார். ஏனெனில் நோய் அவர் தலையில் உள்ளது. தொழுநோயால் பாதிக்கப்பட்டவர் கிழிந்த உடை அணிந்து, தலை வாராமல் மேலுதட்டை மறைத்துக் கொண்டு, “தீட்டு, தீட்டு “, என குரலெழுப்ப வேண்டும். நோயுள்ள நாளெல்லாம் அவர் தீட்டுள்ளவர். எனவே தீட்டுள்ள அவர் பாளையத்துக்கு வெளியே தனியாகக் குடியிருப்பார்.

## இரண்டாம் வாசகம்: 1கொரி 10:31—11:1

அதற்கு நான் சொல்வது நீங்கள் உண்டாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் கடவுளுடைய மாட்சிக்காகவே செய்யுங்கள். யூதருக்கோ கிரேக்கருக்கோ கடவுளின் திருச்சபைக்கோ இடையூறாய் இராதீர்கள். நானும் அனைத்திலும், அனைவருக்கும் உகந்தவனாய் இருக்கிறேன். நான் எனக்குப்